# தமிழ்மொழியும் இலக்கியமும்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 7

**(2016ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**

தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.

இணையத்தளம் : **www.nie.lk**

மின்னஞ்சல் : **info@nie.lk**

# தமிழ்மொழியும் இலக்கியமும்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 7

**(2016ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**

தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.

இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

தமிழ்மொழியும் இலக்கியமும்

ஆசிரியர் வழிகாட்டி

தரம் - 7

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ISBN

முதலாம் பதிப்பு : 2016

தேசிய கல்வி நிறுவகம்

தமிழ்மொழித்துறை,

மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்

தேசிய கல்வி நிறுவகம்

இலங்கை.

இணையத்தளம் : **www.nie.lk**

மின்னஞ்சல் **: info@nie.lk**

அச்சுப் பதிப்பு : அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்.

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2016ஆம் ஆண்டிலிருந்து தரம் 7, 11 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின்போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்துப் பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கல்வி நிறுவகம்.**

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்தவொரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியாயமற்றவற்றைக் களைந்து, நல்லவற்றைப் பயன்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாக அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதி மிக்கவை எவையோ அவையும் கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டத்தில் அடங்குகின்ற பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் (Facilitator) போன்றவையெல்லாம் அவ் வகையிலேயே கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை பூகோள செல்நெறிகளையும் பண்டைய அருஞ் செல்வங்களையும் கலக்கச் செய்து, தனது கல்விக் கோலத்தை உரவாக்கிக் கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கு அமைய, எட்டாண்டுகளுக்கு ஒரு தடவை கல்வி மறுசீரமைப்புகளினூடாக இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இந்த ஆசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மையை தேசியமட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது, அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்கு உரியவை அன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காக பாட விடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக, கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றி அமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்துக்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதல் அளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டி ஆசிரியர்கள் மட்டுமன்றி, மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாட நூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இந்த ஆசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அல்ல என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில் மதிப்பீடு நடத்தும், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றி பாட நிறைவில் வகுப்பறையில் வசதி செய்து மதிப்பிடப்பட வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இந்த ஆசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்,**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்,**
**தேசிய கல்வி நிறுவகம்.**

**ஆலோசனையும் அனுமதியும்** **பாடத்திட்டக் குழு**

கல்விசார் அலுவல்கள் சபை
தேசிய கல்வி நிறுவகம்.

**பாட விடய ஆலோசனை**

பேராசிரியர், கலாநிதி வ. மகேஸ்வரன்
தலைவர், தமிழ்த்துறை, பேராதனைப்
பல்கலைக்கழகம்.
பேராசிரியர், கலாநிதி க. விசாகரூபன்
தலைவர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.
கலாநிதி ரமீஸ் அப்துல்லா,
தலைவர், மொழிகள் பீடம், தென் கிழக்குப்
பல்கலைக்கழகம்.
திருமதி. ரூபிவலன்ரினா பிரான்சிஸ
தலைவர்,தமிழ்த்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.
திரு. க. இரகுபரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தென்கிழக்குப்
பல்கலைக்கழகம்.
கலாநிதி. ஸ்ரீ. பிரசாந்தன்
சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.
திரு.லெனின் மதிவானம்
பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.
செல்வி. வ. விஜயலெட்சுமி
பணிப்பாளர், தமிழ்மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**இணைப்பாக்கம்**

திரு. மு. தயாநிதி
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.
திருமதி. நா. சீதரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**வளப் பங்களிப்பு**

திரு. மு. தயாநிதி
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித்துறை,
கலாநிதி. ந. இரவீந்திரன்,
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித்துறை,
தேசிய கல்வி நிறுவகம்
திரு. ந. அருளானந்தம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம், மாத்தளை.
திரு. த. யுவராஜன்
உதவிக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.
ஜனாப். மு. த. முஸாம்மில்
விரிவுரையாளர், மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி
திரு. பா. மகாலிங்கசிவம்
விரிவுரையாளர், கோப்பாய், ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்.
திருமதி . ரதி தேவசுந்தரம்
ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், கண்டி.
திருமதி. த. நிறைமதி
ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம்,
வவுனியா தெற்கு.
திருமதி. த. மாணிக்கராசா
ஆசிரியர், கொ/விவேகானந்தா கல்லூரி, பம்பலப்பிட்டி.

**மொழிப் பதிப்பு**

திரு. மு. தயாநிதி
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித்துறை.

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

பாடசாலைகளின் கலைத்திட்டத்தில் தமிழ்மொழியும் இலக்கியமும், எனும் பாடம் வாரமொன்றுக்கு ஐந்து பாடவேளைகளாக 06 - 11 ஆந் தரங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இத் தரங்களுக்குரிய பாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டை நடத்த எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள் பொருளுணர்ந்து வாசிப்பதற்கும், எழுத்துப்பிழை, சொற்பிழை, தொடர்ப்பிழை, வாக்கியப்பிழை, பொருட்பிழை, மரபுப்பிழை இன்றி எழுதவும் பேசவும் மொழியைப் பொருத்தமாகப் பயன்படுத்த வேண்டும்.

06 - 11 ஆந் தரங்களுக்காக தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் படி, தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்துக்கான கலைத்திட்டம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியானது பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்களைக் கொண்டமைந்துள்ளது. ஒவ்வொரு தேர்ச்சி மட்டங்களும் உள்ளடங்கும்வகையில் பாடமுன்னாயத்தம் தயார்படுத்துவதற்கான செயற்பாடுகள் தரப்படுகின்றன. இவற்றை முன்னுதாரணமாகக் கொண்டு ஏனைய பாடங்களுக்கும், மாணவர்களின் வகுப்பறைச் செயற்பாடுகளுக்குப் பொருத்தமானவகையில் பாடத்திட்டத்தினை ஒழுங்குபடுத்திக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினைச் சிறப்பாக மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ்மொழியும் இலக்கியமும் எனும் பாடத்தின் மூலம் மாணவரிடத்தே கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்யும் போது, பாடங்களும் அப்பாடங்களைப் பயிலுவதற்காகப் பயன்படுத்தும் முறையியல்களும் முக்கியமானவை. தமது ஆக்கவியல் திறமைகளைப் பயன்படுத்தி, வகுப்பறைத் தேவையின்படி இச்செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்து கொள்வதோடு, புதிய செயற்பாடுகளையும் ஆசிரியர்கள் தயாரித்துக் கொள்ளலாம். தமிழ்மொழியும் இலக்கியமும் எனும் பாடம் செயன்முறைச் செயற்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு கற்றல் - கற்பித்தலை முன்கொண்டு செல்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பொருத்தமாகத் திட்டமிட்டு, சந்தர்ப்பங்களை மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் அவர்களுடைய திறனை மேலும் வலுப்படுத்த முடியும்.

கற்றல் - கற்பித்தல் மாணவர் மையமாகக் கொண்டு வகுப்பறையில் இடம்பெறுவதனால், அதற்கேற்ப இந்த ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதன்படி கற்றற் பேறுகளில் ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும். ஓர் அலகைக் கற்பித்த பின்னர் எதனைத் தெரிந்திருக்க வேண்டும், எதனை மதிக்க வேண்டும், அத்தகைய பேறுகளை எந்தளவுக்கு அடைய வேண்டுமென்பதில் ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டும். அதாவது, மாணவர்களின் குறிப்பான செயல் அவதானிக்கப்பட வேண்டும், அவர்களது செயற்பாடு அளவிடப்பட வேண்டும், அத்தகைய செயற்பாடு மாணவர்களினாலே மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதில் கவனம் செலுத்துவது அவசியமானதாகும்.

தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் பாடத்தினைச் சிறப்பான முறையில் கற்பிப்பதற்கு பாடத் தலைப்புக்குப் பொருத்தமான தரவிருத்தி உள்ளீடுகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மாணவர்களுடைய திறன்களை விருத்தி செய்யக்கூடிய பொருத்தமான கற்பித்தல் சாதனங்களை அவர்களது நிலைக்கேற்பத் தயாரித்து வகுப்பறை முகாமைத்துவத்தில் வெற்றியடைய வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் பாடத்தினைச் செம்மையாகக் கற்பிப்பதனூடாக, மாறிவரும் உலகுக்குப் பொருத்தமான இளஞ் சந்ததியினரை உருவாக்க வழிகாட்டுவதே இந்த ஆசிரியர் வழிகாட்டியின் எதிர்பார்ப்பாகும். இந்த வழிகாட்டி தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தமிழ்மொழித்துறை,**
**தேசிய கல்வி நிறுவகம்,**

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii |
| 02. | பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iv |
| 03. | கலைத்திட்டக் குழு | v |
| 05. | ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் | vi |
| 06. | தேசிய இலக்குகள் | viii |
| 07. | அடிப்படைத் தேர்ச்சிகள் | ix |
| 08. | பாடத்திட்டம் | xi |
| 09. | கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல் | 1 - 93 |

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது, தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக, நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத்திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக்கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருக்கள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு, தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போதிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப, இணங்கி வாழவும் மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

**(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 திசெம்பர்)**

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தரும் வகையிலான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல். விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை : கணினி அறிவு - கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### 2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு.

### 3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு (சமூகம், உயிரியல், பௌதிகம்) தொடர்புறுகின்றன.

சமூகச் சூழல் : தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
- அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்.

**7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக, மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

# பாடத்திட்டம்

# கற்றல் - கற்பித்தற்
# செயன்முறைக்குரிய வழிகாட்டல்

# குள கேட்டலும் பேச்சும்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 1.0<br>பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப, வினைத் திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார். | 1.1<br>எழுத்துக்களின் ஒலிப்புக்கேற்ப, சொற்களைச் செம்மையாக உச்சரிப்பார். | • செய்யுள்<br>• உரைநடை<br>- சொற்கள்<br>- சொற்றொடர்கள்<br>- வாக்கியங்கள் | • ஒலி வேறுபாட்டுச் சொற்றொகுதிகளை உச்சரிப்பார்.<br>- ல, ழ, ள<br>- ண, ந, ன<br>- ர, ற<br>• 'நா' நெகிழ் பயிற்சிகளைச் செய்வார்.<br>• 'நா' பிறழ் பயிற்சிகளைச் செய்வார்.<br>• கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்துவார். | 02 |
| | 1.2<br>பாடலை / செய்யுளைப் பொருளுணர்ந்து சொல்லுவார் / ஓதுவார். | • விழுமியக் கருத்தும் ஓசை நயமும் சொல் நயமும் பொருள் நயமும் கொண்ட<br>• செய்யுள்கள்<br>• நாட்டார்பாடல்கள் | • பாடலை / செய்யுளை மனனம் செய்வார்.<br>• பாடலை / செய்யுளை ஓசையோடு ஓதுவார்.<br>• பாடலை / செய்யுளை உச்சரிப்புத் தெளிவுடன் சொல்லுவார் / ஓதுவார்.<br>• பாடலை / செய்யுளைப் பொருள் விளங்கி சொல்லுவார் / ஓதுவார். | 04 |
| | 1.3<br>கேட்டுக் கிரகித்தவற்றைச் செம்மையாகக் கூறுவார். | • செய்யுள்<br>• சிறிய கதைகள்<br>• அறிவித்தல்கள்<br>• அறிவுறுத்தல்கள் | • கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிப்பார்.<br>• சாராம்சத்தைக் கூறுவார்.<br>• பழமொழிகள், விடுகதைகள், துணுக்குகள் முதலியவற்றைக் கூறுவார். | 02 |
| | 1.4<br>செயல் திறனும் வினைத்திறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார். | • செய்யுள்<br>• உரைநடை<br>• சிறுவருக்கான கதைப் பாடல்<br>• நாட்டார் பாடல்<br>• சொற்பொழிவு | • கேட்டலில் விருப்புடன் ஈடுபடுவார்.<br>• அவதானித்துக் கேட்டுத் துலங்குவார்.<br>• தரவுகள், தகவல்களைச் சேகரிப்பார்.<br>• கேட்டுக் கிரகித்தவற்றை மற்றவர்களுக்கு விளக்குவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 2.0<br>சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவகையில் உரையாடுவார். | 2.1<br>தமது உணர்வுகளும் எண்ணங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் உரையாடுவார். | • உரையாடல்<br>• கலந்துரையாடலுக்குப் பொருத்தமான உரைநடைப் பகுதிகள் | • பல்வேறுபட்ட தகவல்களைச் சேகரிப்பார்.<br>• அவற்றினூடே வரும் கருத்துக்களை இனங்காண்பார்.<br>• விடயத்தெளிவு பெறுவார்.<br>• விடயங்களை விபரித்துக் கூறுவார்.<br>• கலந்துரையாடலின்போது பேச்சை அவதானித்து, சுயமாகத் தமது கருத்துக்களை முன்வைப்பார்.<br>• தமக்கு ஏற்படும் பிரச்சினைகளையும் நியாயங்களையும் எடுத்துக் கூறும் திறனைப் பெறுவார். | 07 |
| 3.0<br>பல்வேறு பாத்திரங்களை ஏற்று, அவற்றின் இயல்புகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திப் பேசுவார். | 3.1<br>பாத்திரங்களின் இயல்புகளுக்கேற்ப நடித்துப் பேசுவார். | • நாடகங்கள்<br>• சிறுகதைகள்<br>• நாட்டார்பாடல்கள் | • பாத்திரங்களின் உணர்வுகளை வெளிக்கொணரும் வகையில், உரையாடுவார் / நடித்துக்காட்டுவார்.<br>- உச்சரிப்புத் தெளிவு<br>- பொருத்தமான தொனி<br>- முகபாவம்<br>- அங்க அசைவு | 06 |
| | 3.2<br>பாவனை செய்து பேசுவார். | • அறிவிப்புகள்<br>• விளம்பரங்கள்<br>• கதைகள்<br>• சுயசரிதைக் கட்டுரைகள் | • பல்வேறுபட்ட பாத்திரங்களாகப் பாவனை செய்து பேசுவார்.<br>• ஒரேசமயத்தில் ஒருவரே பல்வேறுபட்ட பாத்திரங்களாகப் பாவனை செய்து, அவற்றின் தொனி வெளிப்படப் பேசுவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 4.0<br>தமது எண்ணங்களை, கேட்போர் உளங் கொள்ளத்தக்க வகையில் எடுத்துரைப்பார். | 4.1<br>ஆக்கத் திறன் வெளிப்படும் விதத் தில் தெளிவாகப் பேசுவார். | • செய்யுள்கள்<br>• சிறிய கட்டுரைகள்<br>• முடிவுறாக்கதைகள்<br>• அனுபவக் கட்டுரைகள்<br>• சம்பவ விபரிப்பு | • ஆசிரியர் கதையின் ஆரம்பத்தைக் கூற, மாணவர்கள் அதனை தொடர்ந்து கூறுவார்.<br>• மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் புத்தாக்க பூர்வமாகக் கதையை நிறைவுசெய்வார்.<br>• புதிய முடிவுகளை அமைத்துக் கதைகளைக் கூறுவார்.<br>• தமது சொந்த அனுபவங்களை வெளிப்படுத்திக் கூறுவார். | 03 |
| | 4.2<br>எடுத்துக் கொண்ட விடயத்துக்குப் பொருத்தமாக, பொருட் செறிவோடு பேச்சு நுட்பங்களைக் கையாண்டு பேசுவார். | • கட்டுரைகள்<br>• சிறிய மேடைப் பேச்சுகள்<br>• சிறிய கதைகள் | • பொருத்தமான தலைப்பினைத் தெரிவுசெய்வார்.<br>• தலைப்புக்கு ஏற்ற வகையில் பேசுவார்.<br>• பேச்சுப் பொறிமுறைகளை அனுசரித்துப் பேசுவார்.<br>• சபையை ஈர்க்கும் வகையில் பேசுவார். | 03 |

## வாசிப்பு

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 5.0<br>ஆக்கபூர்வமான செயல் திறன் உடைய வாசகராகச் செயற்படுவார். | 5.1<br>விடயத்தெளிவோடு வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார். | • கவிதைப் பகுதி<br>• உரைநடைப் பகுதி<br>- கதைப் பகுதி<br>- நாடகம் | • வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.<br>- தெளிவாக உச்சரித்தல்<br>- எழுத்துக்களின் ஒலி பேதங்களை இனங்கண்டு வாசித்தல்<br>- தொனி பேதங்களுடன் வாசித்தல்<br>- உரிய வேகத்தில் வாசித்தல்<br>- எழுத்துக்களுக்கும் சொற்களுக்குமுரிய அழுத்தத்தைக் கொடுத்து வாசித்தல்<br>- சொற்களைப் பொருத்தமுறச் சேர்த்தும் பிரித்தும் வாசித்தல்<br>- நிறுத்தக் குறிகளை அனுசரித்து வாசித்தல்<br>• மௌனமாக வாசித்து, கிரகித்துத் துலங்குவார்.<br>• கருத்தூன்றி வாசிப்பார்.<br>• கொண்டு கூட்டி வாசிப்பார்.<br>• சந்தி பிரித்து வாசிப்பார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 6.0<br>கிரகித்துப் பொருள் உணர்ந்து வாசிப்பார். | 6.1<br>மௌனமாக வாசித்துக் கிரகித்துத் துலங்குவார். | • செய்யுள்கள்<br>• உரைநடைகள் | • பிரதான கருத்து, துணைக் கருத்துக்களை இனங் கண்டு வாசிப்பார்.<br>• வாசித்த பகுதியைச் சொந்த மொழி நடையில் எழுதுவார்.<br>• அரும்பதங்களின் பொருளை எழுதுவார். | 03 |
| | 6.2<br>பல்வேறு நோக்கங்களுக் காக வாசிப்பார். | • செய்யுள்கள்<br>• உரைநடைகள் | • பல்வேறு தகவல்களைச் சேகரிப்பார்.<br>• நடைமுறைத் தேவைக்கேற்ற ஆக்கங்களை இனங்காண்பார்.<br>• புதிய ஆக்கங்களைப் படைக்க முன்வருவார்.<br>• படைப்புக்களினூடாக பாத்திரங்களின் இயல்புகளைக் கூறுவார். | 02 |
| 7.0<br>இரசனைக் காகவும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார். | 7.1<br>படைப்புக்களை வாசித்து நயப்பார். | • செய்யுள்கள்<br>• உரைநடைகள்<br>- கடிதங்கள்<br>- அறிவித்தல்கள்<br>- அறிவுறுத்தல்கள் | • படைப்புக்களின் உள்ளடக்கத்தை விளங்கிக் கூறுவார்.<br>• நயந்தவற்றை எடுத்துக் கூறுவார்.<br>• படைப்புக்களைப் படைக்க முன்வருவார்.<br>• விழுமியக் கருத்துக்களை அறிந்து கூறுவார். | 13 |

## எழுத்து

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 8.0<br>அவதானமாகக் கிரகித்து, எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, இலக்கண வழுவின்றி, உரிய நிறுத்தக் குறிகளுடன் ஆக்கங்களைத் தெளிவாக எழுதுவார். | 8.1<br>எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, வழுவின்றி நேர்த்தி யாக எழுதுவார். | • பார்த்தெழுதுதல்<br>- சொற்கள்<br>- சொற்றொடர்கள்<br>- வாக்கியங்கள்<br>- பந்திகள்<br>- பாடல்கள் | • உறுப்பமைய எழுதுவார்.<br>- திசைமுகம் - வரிவடிவம்<br>• எழுத்துக்களுக்கிடையேயும் சொற்களுக்கிடையேயும் ஏற்ற இடைவெளிவிட்டு எழுதுவார்.<br>• நேர்த்தியாக எழுதுவார்.<br>• ஏற்ற வேகத்துடன் எழுதுவார்.<br>• நிறுத்தக் குறிகள் இட்டு எழுதுவார். | 02 |
| | 8.2<br>அவதானித்துக் கேட்டுக் கிரகித்தவற்றை வழுவின்றி எழுதுவார். | • சொல்வதெழுதுதல்<br>- சொற்கள்<br>- சொற்றொடர்கள்<br>- வாக்கியங்கள்<br>- பந்திகள் | • அவதானமாகக் கேட்டு எழுதுவார்.<br>- ஏற்ற வேகம் - வரிவடிவம்<br>• ஒலிவேறுபாடுகளை அனுசரித்து எழுதுவார்.<br>• பிழையின்றி எழுதுவார்.<br>• நிறுத்தக் குறிகளைப் பொருத்தமாகக் கையாண்டு எழுதுவார். | 02 |
| 9.0<br>வாசித்துக் கிரகித்தவற்றைத் தெளிவாக எழுதுவார். | 9.1<br>வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார். | • செய்யுள்<br>• உரைநடை<br>- நாட்டார்பாடல்கள் | • கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிப்பார்.<br>• பிரதான கருத்தை இனங்கண்டு எழுதுவார்.<br>• துணைக் கருத்துக்களை எழுதுவார்.<br>• பாத்திர இயல்புகளைச் சுருக்கமாக விளக்கி எழுதுவார்.<br>• ஒரு விடயத்தினை ஒழுங்காகவும் தெளிவாகவும் நேர்த்தியாகவும் எழுதுவார். | 14 |
| 10.0<br>எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, வழுவின்றி எழுதுவார். | 10.1<br>வழுக்களின்றி வாக்கிய அமைதியோடு எழுதுவார். | • உரைநடைகள்<br>• பயிற்சி<br>- வாக்கியம் அமைத்தல் | • வாக்கிய இயைபுடன் எழுதுவார்.<br>(எழுவாய், பயனிலை)<br>• திணை, பால், எண், இடம், காலம் என்பன இயைபுபட வாக்கியம் எழுதுவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 10.2<br>கருத்துப் புலப்படுமாறு பந்தி எழுதுவார். | • உரைநடைப் பகுதி<br>- பந்தி<br>- கட்டுரைகள்<br>- பத்திரிகைகள் | • பந்தி அமைக்கும் முறையினை அறிந்து எழுதுவார்.<br>• தலைமைப் பொருளை இனங்கண்டு எழுதுவார்.<br>• துணைக் கருத்துக்களை விரித்து எழுதுவார்.<br>• கருத்துத் தொடர்புடன் எழுதுவார்.<br>• வாக்கிய இயைபுடன் எழுதுவார்.<br>• உரிய ஒழுங்கு முறையில் எழுதுவார். | 02 |
| 11.0<br>படைப்புக்களை வாசித்த அனுபவங்கள் ஊடாக, படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களை சுயமாக எழுதுவார். | 11.1<br>பல்வேறு ஆக்கங்களை எழுதுவார். | • பாடல்கள்<br>• கவிதைகள்<br>• உரைநடை<br>• கதைகள்<br>• கட்டுரைகள்<br>• உறவுமுறைக் கடிதம்<br>• அழைப்பிதழ்<br>• உரையாடல்கள்<br>• நாடகம் | • அனுபவங்கள், அவதானிப்புகள், சிந்தனைகளை வெளிப்படுத்திப் பல்வேறு ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார்.<br>• தர்க்கரீதியான தொடர்புடன் பந்திகளை அமைத்து கருத்துக்கள் புலப்பட எழுதுவார்.<br>• தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் நேர்த்தியாகவும் எழுதுவார்.<br>• ஆக்கங்களின் வடிவம், அமைப்பு, தலைப்பு என்பன பொருத்தமுற எழுதுவார்.<br>• பொருத்தமான மொழிநடையில், மற்றவர்களுக்கு விளங்கும் வகையில் எழுதுவார். | 04 |
| | 11.2<br>நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவார். | • விளம்பரம்<br>• துண்டுப்பிரசுரம்<br>• உறவுமுறைக் கடிதம்<br>• அழைப்பிதழ்<br>• செய்திகள்<br>• மேடைப்பேச்சு | • பொருத்தமான அமைப்போடு எழுதுவார்.<br>• தலைப்புக்கு / கேட்கப்பட்ட விடயத்துக்குப் பொருத்தமாக எழுதுவார்.<br>• விடய உள்ளடக்கத்தைத் தெளிவாகவும் நேர்த்தியாகவும் எழுதுவார்.<br>• வாசிப்போருக்குப் புரியும் மொழிநடையில் எழுதுவார்.<br>• சுருக்கமாக விளக்கி எழுதுவார். | 09 |

## மொழித்திறன் விருத்தி

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
| --- | --- | --- | --- | --- |
| 12.0<br>சொற் களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார். | 12.1<br>சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து, செம்மையாகப் பிரயோகிப்பார். | • செய்யுள்<br>• உரைநடை<br>• கதை<br>• கட்டுரை<br>• நாடகம் | • சொற்களை அறிந்து பயன்படுத்துவார்.<br>- ஒத்த சொற்கள்<br>- எதிர்ச் சொற்கள்<br>- எதிர்ப்பாற் சொற்கள்<br>- ஒரு சொல் பல பொருள்<br>- பல பொருள் ஒரு சொல்<br>- மரபுச் சொற்கள்<br>- கலைச் சொற்கள் | 06 |
| | 12.2<br>சொற்றொடர்களின் பொருளையும் வகையையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார். | • செய்யுள்<br>• கவிதை<br>• உரைநடை<br>• நாடகம் | • சொற்றொடர்களின் இயல்பு, பொருள் என்பவற்றை அறிந்து பயன்படுத்துவார்.<br>- மரபுத் தொடர்கள்<br>- உவமைதொடர்<br>- உருவகத் தொடர்<br>- இரட்டைக்கிளவி<br>- இணைமொழி<br>- அடுக்குத் தொடர்<br>• சொற்றொடர்களைச் செம்மையாகப் பிரயோகிப்பார். | 15 |
| 13.0<br>மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார். | 13.1<br>எழுத்துக்களின் ஒலிப்பு முறையையும் வகைதொகை யையும் அறிந்து, பயன்படுத்துவார். | • செய்யுள்<br>• உரைநடை<br>• கதை<br>• கட்டுரை<br>• நாடகம் | • எழுத்துக்களின் ஒலிப்பு முறையை அறிந்து பயன்படுத்துவார்.<br>- குறில், நெடில்<br>- ர, ற, ல, ள, ழ, ந, ண, ன<br>• எழுத்துக்களின் வகை, தொகையை அறிந்து பயன்படுத்துவர்.<br>- உயிரெழுத்துகள்<br>- மெய்யெழுத்துக்கள்<br>- உயிர் மெய்யெழுத்துக்கள்<br>- ஆய்த எழுத்துக்கள்<br>- சுட்டெழுத்துக்கள்<br>- கிரந்த எழுத்துக்கள் | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 13.2<br>சொற்களின் வகை யையும் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார். | • செய்யுள்<br>• உரைநடை | • சொற்களின் வகையையறிந்துகொள்வார்.<br>- பெயர்ச் சொல்<br>- வினைச் சொல்<br>- இணைப்பிடைச் சொல்<br>- கலைச் சொற்கள்<br>• சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுவார். | 13 |
| | 13.3<br>சொற்றொடர், வாக்கியம் என்பவற்றின் வகையையும் அவற்றின் இயல்பையும் அறிந்து, பிரயோகிப்பார். | • பொருத்தமான உரைநடைப் பகுதிகள்<br>• உரையாடல் | • சொற்றொடர், வாக்கியங்கள் என்பவற்றின் வகையை அறிந்து கூறுவார்.<br>• வாக்கியங்களின் இயல்பை அறிந்து பயன்படுத்துவார்.<br>• வாக்கியங்களை இயைபுற எழுதுவார்.<br>- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்<br>- திணை, பால், எண், இடம், காலம்<br>• வேற்றுமை உருபு பயன்படும் விதத்தினை அறிந்து கொள்வார்.<br>• அடைமொழிகளின் பயன்பாட்டினையும் சிறப்பினையும் அறிந்து கொள்வார்.<br>• சொற்கள் புணரும் வகையினை அறிந்து பயன்படுத்துவார். | 17 |
| | 13.4<br>நிறுத்தக்குறிகளைப் பொருத்தமாகப் பிரயோகிப்பார். | • பொருத்தமான உரைநடைப் பகுதிகள்<br>• உரையாடல் | • நிறுத்தக் குறிகளை அறிந்து கூறுவார்.<br>• நிறுத்தக் குறிகளைப் பொருத்தமாகப் பிரயோகிப்பார்.<br>- முற்றுப்புள்ளி<br>- காற்புள்ளி<br>- வினாக்குறி<br>- வியப்புக்குறி<br>- அடைப்புக்குறி<br>- மேற்கோள்குறி | 02 |

## முதலாம் தவணை

| இல | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | பாடவேளை | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 01 | 7.0 | 7.1 | அந்தரே கதைகள் | 03 | 02 |
| 02 | 8.0 | 8.1 | பார்த்தெழுதுதல் | 02 | 04 |
| 03 | 1.0 | 1.3 | செய்யுள் - அறு | 02 | 06 |
| 04 | 13.0 | 13.4 | நிறுத்தக் குறிகள் | 02 | 08 |
| 05 | 6.0 | 6.2 | கடமை | 02 | 11 |
| 06 | 1.0 | 1.1 | சொற்கள் - லகர, ழகர, ளகர, ணகர, நகர, னகர, ரகர, றகர, ஆகிய எழுத்துக்களாலான சொற்கள் | 02 | 13 |
| 07 | 8.0 | 8.2 | சொல்வதெழுதுதல் | 02 | 15 |
| 08 | 10.0 | 10.1 | வாக்கியம் அமைத்தல் | 04 | 17 |
| 09 | 7.0 | 7.1 | காட்டு விலங்குகளைக் காப்போம் | 03 | 19 |
| 10 | 10.0 | 10.2 | உரைநடைப் பகுதி<br>- பந்திகள்<br>- கட்டுரைகள்<br>- பத்திரிகைகள் | 02 | 21 |
| 11 | 13.0 | 13.1 | கட்டுரை | 04 | 23 |
| 12 | 1.0 | 1.2 | ஐவேம் | 04 | 25 |
| 13 | 12.0 | 12.1 | ஒத்த கருத்துச் சொற்கள்<br>எதிர்க் கருத்துச் சொற்கள் | 02 | 27 |
| 14 | 9.0 | 9.1 | காந்தியடிகள் கடிதம் | 05 | 29 |
| 15 | 11.0 | 11.2 | உறவுமுறைக் கடிதம் | 04 | 32 |
| 16 | 12.0 | 12.1 | எதிர்ப்பாற் சொற்கள் | 02 | 34 |

**தேர்ச்சி 7.0** : இரசனைக்காகவும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : படைப்புக்களை வாசித்து நயப்பார்.

**விடய உள்ளடக்கம் : அந்தரே கதைகள்**

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்**

- "**அந்தரே கதைகள்**" என்னும் பாடப்பரப்பை வாசித்துக் கிரகிப்பார்.
- அப்பாடப்பரப்பு குறிப்பிடும் பிரதான கருத்தை எடுத்துக் கூறுவார்.
- பாடத்தை வாசித்துக் கிரகித்து, வினாக்களுக்கு விடை எழுதுவார்.
- பாடப்பரப்பை ஒருவர் வாசிக்க, கிரகித்து தமது கருத்தைக் கூறுவார்.
- தாம் கிரகித்து நயந்த பகுதியைக் குறிப்பிட்டு அதற்கான காரணத்தையும் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- "**அந்தரே கதைகள்**" என்னும் பாடத்தை மௌனமாக வாசித்தல்.
- குழுமுறையில் வாசித்துக் கிரகித்த கருத்துக்களை முன்வைக்கச் செய்தல்.
- கதை கூறும் விழுமியக் கருத்துக்களை பட்டியற்படுத்த வழிகாட்டல்.
- இது போன்ற சிறிய கதைகளை எழுத வழிகாட்டல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

- "**அந்தரே**" பற்றிய அறிமுகம் .
- சொல்லணி எழுத்தும் சொல்லும் பற்றி வருவது.
- செவிக்கு இனிமையானதும், நினைவில் வைத்திருக்கவும் உதவுவது.
- மேடைப் பேச்சிலும் உரைநடை வகையிலும் சிலேடை கையாளுதல்.

**பொருள் கண்டறிக**

- பிஞ்சிற் பழுத்த பழம்.
- புலிக்குட்டிக்குள்ள திறமை பெரும்புலிக்கு இல்லாமல் போய்விடுமா?
- மாடுமாதிரி வாய் திறக்காமல் மிக அமைதியாக இருக்க வேண்டும்.
- மூக்கறுபடல்
- சுட்டித்தனம்
- சளைத்தவரல்ல

- நிரூபித்தல்
- அபிப்பிராயம்
- சபாஷ்
- துடுக்குள்ள பையன்
- குறும்புத்தனம்
- தலைகுனிந்து நிற்றல்
- ஜோலியாக
- பரோபகார சிந்தை
- மெச்சுதல்
- குஷி

## தரவிருத்தி உள்ளீடுகள்

- அரும்பதங்கள் எழுதப்பட்ட டிமைன்தாள்கள்
- எழுதுகருவிகள்
- எழுதுதாள்கள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- பாடப்பரப்பை மௌனமாக வாசிப்பார்.
- பொருள் பொதிந்த தொடர்களுக்கு விளக்கம் எழுதுவார்.
- பாடப்பரப்பை வாசித்துக் கிரகித்து வினாக்களுக்கு விடை எழுதுவார்.
- "**அந்தரே ̂**" என்னும் பாத்திரச் சிறப்பையும் அதன் குணாம்சத்தையும் கூறுவார்.

**தேர்ச்சி 8.0 :** அவதானமாகக் கிரகித்து, எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து இலக்கண வழுவின்றி, உரிய நிறுத்தக் குறிகளுடன் ஆக்கங்களைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 8.1 :** எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, வழுவின்றி நேர்த்தியாக எழுதுவார்.

**விடய உள்ளடக்கம் :** பார்த்தெழுதுதல்

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள்**

- எழுத்துக்களை உறுப்பமைய எழுதுவார்.
- திசைமுகம் பற்றி அறிந்து, அதற்கமைய எழுதுவார்.
- எழுத்துக்களுக்கிடையேயும் சொற்களுக்கிடையேயும் ஏற்ற இடைவெளிவிட்டு எழுதுவார்.
- அவதானமாகக் கிரகித்ததை நேர்த்தியாக எழுதுவார்.
- எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, ஏற்ற வேகத்தோடு எழுதுவார்.
- உரிய நிறுத்தக்குறிகள் இட்டு, பந்தியொன்றைப் பார்த்தெழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- மாணவர்களுடன் கலந்துரையாடி, உறுப்பமைய எழுதும் முறை பற்றி விளக்கம் கொடுத்தல்.
- ஒவ்வொரு எழுத்துக்குமுரிய ‘திசைமுகம்’ பற்றிக் கலந்துரையாடி எழுதவைத்தல்.
- சொற்களுக்கிடையில் இடைவெளிவிடும் முறைபற்றி விளக்கமளித்து, அதற்கேற்ப எழுதுவித்தல்.
- பந்தியை நேர்த்தியாக எழுதுவது பற்றிக் கலந்துரையாடி, நேர்த்தியாக எழுதவைத்தல்.
- கவிதையை அல்லது, பாடலை அதன் அமைப்புக்கு ஏற்ப எழுத வேண்டிய முறைபற்றி கலந்துரையாடி வழிகாட்டல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

- எழுத்துப் பொறிமுறையிலான வரிவடிவம்
- திசைமுகம் பற்றிய அறிமுகம்
- நிறுத்தக்குறிகள்
- சொற்கள், சொற்றொடர்கள், பந்திகள்

## தரவிருத்தி உள்ளீடுகள்

- திசைமுகம் சார்ந்த எழுத்துக்களை எழுதிய சொல்லட்டைகள்
- எழுதுகருவிகள்
- எழுதுதாள்கள்
- பொருத்தமான கற்றல் - கற்பித்தல் உபகரணங்கள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- உறுப்பமைய எழுத வேண்டியதன் முக்கியத்துவத்தை அறிந்து அதற்கேற்ப எழுதுவார்.
- திசைமுகம் பற்றிய அறிவு பெற்று, அதற்கேற்பத் துலங்குவார்.
- பந்தியை நேர்த்தியாக எழுதுவார்.
- பாடலை உறுப்பமைய எழுதுவார்.
- பார்த்தெழுதலில் ஈடுபடும்போது, ஏற்ற வேகத்தோடு துலங்குவார்.

### கீழ் வரும் பந்தியைப் பார்த்தெழுதுக

தொல்காப்பியர் பூர்வீக தமிழர் வாழ்ந்த நிலப்பரப்பை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு நிலங்களாக வகுத்து அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையை ஆராய்கிறார். நிலத்தை அதன் மண்ணின் தன்மை, அங்கு வாழ்ந்து வந்த மக்கள், அவர்களின் இயல்புகள், தொழில், உணவு, உடை, காதல், வீரம், கொடை ஆகிய பண்புகளுக்கு அவர்கள் அளித்திருந்த (முக்கியத்துவம், ஆங்காங்கு தொல்காப்பியர் முதல், கரு, உரி என மூன்றாகப் பிரித்து விளக்குகின்றார்.) இவற்றுள் கரு என்ற பிரிவில் முதலிடம் பெறுவது தெய்வம். நான்கு நிலங்களுக்கும் உரிய தெய்வம் பற்றித் தொல்காப்பியர் பொருளதிகாரத்தின் ஐந்தாவது சூத்திரத்தில் பின்வருமாறு விளக்குகின்றார்.

‘‘ மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்

சொல்லிய முறையால் சொல்லவும்படுமே’’

இச் சூத்திரத்தில் வரும் தெய்வப் பெயர்கள் புராணங்களோடு தொடர்புடையன எனத் தெரியவருகிறது. வேதங்களைத் தொடர்ந்து கற்று வந்த ரிஷிகள், வேதப் பாடல்களினதும் பொருள் பற்றிச் சிந்தித்து வந்தார்கள். அச் சிந்தனைகளின் முடிவுகள் உபநிடதங்களாகப் பரிணமித்தன. அவ் உபநிடதங்கள் தெய்வம் அல்லது மெய்ப்பொருள் ஒன்றே என வற்புறுத்திக் கூறுகின்றன. பல தெய்வ வடிவங்களும் இந்தப் பிரபஞ்சமும் மாயை என்று அவை கூறுகின்றன. இந்த அத்வைத மார்க்கம் சாதாரண மக்களால் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கவில்லை. ஆகவே, புராணகால ரிஷிகள் மாயையை ஏற்றுக்கொண்டு பல கடவுள்களைப் படைத்துக் கொண்டனர். மக்களும் தங்களுக்கு ஏற்றவகையில் தங்கள் வாழ்க்கைக்குப் பொருத்தமான மூர்த்தி வடிவங்களை வணங்கத் தொடங்கினர். இந்து ஆரியர்களின் இப்புராணக் கதைகள் இந்தியா முழுவதும் பரவியன. தமிழ் மக்கள் முக்கியமான மேலே கூறிய நான்கு தெய்வங்களை

தங்கள் வாழ்க்கைக்குப் பொருத்தமாக வணங்கி வந்தனர் எனத் தெரிகின்றது.

**தேர்ச்சி 1.0 :** பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.3 :** கேட்டுக் கிரகித்தவற்றைச் செம்மையாகக் கூறுவார்.

**விடய உள்ளடக்கம் :** ஆறு

**பாடவேளைகள் :** 02

### கற்றற் பேறுகள்

- செய்யுளை உள்ளபடி வாசிப்பார்.
- செய்யுளைச் சந்திபிரித்தும் கொண்டுகூட்டியும் வாசிப்பார்.
- செய்யுள்களின் அரும்பதங்களுக்குப் பொருள் கூறுவார்.
- செய்யுள்களின் பொருளை அறிந்து கூறுவார்.
- செய்யுள்களின் சாராம்சத்தை எழுதுவார்.
- செய்யுளை இசையுடன் பாடிமகிழ்வார்.
- செய்யுளை ஓசைநயமும் சொல் நயமும் புலப்படும்வண்ணம் ஓதுவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- நன்கு பாடக்கூடியவரின் உதவிபெற்று பாடச்செய்தல் அல்லது, ஆசிரியர் பாடிக்காட்டுதல்.
- ஒலிப்பேழையை ஒலிக்கச் செய்து, பாடத்தினை ஆரம்பித்தல்.
- செய்யுளின் கருத்தைக் கிரகித்துக் கூறச்செய்தல்.
- அரும்பதங்களுக்குப் பொருள் கூறவைத்தல்.
- அருஞ்சொற்களைக் கொடுத்து வசனம் எழுதச்செய்தல்.
- இது போன்ற செய்யுளை எழுத வழிகாட்டுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

### முதன்மைப் பதங்கள் (Key Words) , எண்ணக்கருக்கள்

- கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை பற்றிய அறிமுகம்.
- 'ஆறு' என்ற செய்யுள் பற்றிய அறிமுகம்.
- **அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| அணை | - | அணைக்கட்டு |
| சாடிவரல் | - | மோதிவருதல் |
| கண்ணறை | - | சிறு அறை / வட்டத்துளை |
| பொழில் | - | சோலை |
| ஊற்று | - | நீரூற்று |
| நன்செய் | - | நெல்லுங் கரும்பும் விளையும் வயல் |
| அல்லும் பகலும் | - | எப்பொழுதும் |

## தரவிருத்தி உள்ளீடுகள்


- பாடநூல்
- செய்யுள் இடம்பெறும் ஒலிப்பேழை
- அருஞ்சொற்கள்
- சொல்லட்டைகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- விடயத்தெளிவோடு பொறிமுறைகளை அனுசரித்துச் செய்யுளை வாசிப்பார்.
- செய்யுளைச் சந்திபிரித்துக் காட்டுவார்.
- செய்யுளின் பொருளைக் கூறுவார்.
- செய்யுளை இசையுடன் பாடுவார்.
- செய்யுளின் சாராம்சத்தைக் கூறுவார்.
- சுயமாகப் படைப்பொன்றை ஆக்குவார்.
- தாம் நயந்தவை பற்றிக் கூறுவார்.

### பின்னிணைப்பு

### கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை



கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை 27.07.1876ஆம் ஆண்டு பிறந்தவர். இவர் பக்திப் பாடல்கள், இலக்கியப் பாடல்கள், வரலாற்றுப் பாடல்கள், இயற்கைப் பாடல்கள், சமூகக் கதைகள் என்று பல துறைகளில் திறமையை வெளிக்காட்டியவர். 1922ஆம் ஆண்டு "மனோன் மணியம் மறுபிறப்பு" என்ற திறனாய்வுக் கட்டுரையை எழுதியவர். ஆசிய ஜோதியைத் தமிழில் எழுதியவர். தமிழ்ப் பேரகராதி உருவாக்கத்திற்கு உதவியவர். 24.12.1940ஆம் ஆண்டு கவிமணி விருது இவருக்கு வழங்கப்பட்டது. அக்டோபர் 2005இல் இந்திய அரசு அவருக்காக முத்திரை வெளியிட்டுச் சிறப்பித்தது. இவர் மலரும் மாலையும், மருமக்கள்வழி மான்மியம், உமர்காயான் பாடல்கள், தேவியின் கீர்த்தனைகள், குழந்தைச் செல்வம், கவிமணியின் உரைமணிகள் போன்ற நூல்களை எழுதியுள்ளார். இவ்வாறு பல சாதனைகள் படைத்த கவிமணி அவர்கள், 26.09.1954ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

**தேர்ச்சி 13.0 :** மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.4 :** நிறுத்தக் குறிகளைப் பொருத்தமாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம் :** நிறுத்தக் குறிகள்

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள்**

- நிறுத்தக் குறிகளை அறிந்து கூறுவார்.
- பொருள் நன்கு புலப்படுவதற்கு நிறுத்தக் குறிகள் உரியவாறு பயன்படுத்தப்பட வேண்டுமென்பதை அறிந்து கூறுவார்.
- நிறுத்தக் குறிகளைச் செம்மையாகக் கையாள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- நிறுத்தக் குறிகளை அறிமுகம் செய்தல்.
- நிறுத்தக் குறிகளின் முக்கியத்துவத்தை விளக்குதல்.
- நிறுத்தக் குறிகளுள்ள ஒரு பந்தியைக் கொடுத்து, நிறுத்தக் குறிகள் இடப்பட்டுள்ளவற்றைப் பார்க்கச் செய்தல்.
- நிறுத்தக் குறிகளற்ற பந்தியொன்றை வழங்கி, நிறுத்தக் குறிகளை இடச்செய்து அவற்றின் பிரயோகத்தினை விளக்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

முற்றுப்புள்ளி / முடிப்பிசைக்குறி / முழுமாத்திரை ( . )

- வினாவும் மெய்பாபாடும் இல்லாத ஏனைய எல்லா வாக்கியங்களின் இறுதியிலும் இக்குறி வரும்.

  தமிழ் ஒரு செம்மொழியாக அறிவிக்கப்பட்டுள்ளது. (கூற்று)

  தமிழ்மொழி வாழ்க. (வியங்கோள்)

  கண்ணா இங்கே வா. (ஏவல்)

- சொற்களைக் குறுக்கி எழுதும் இடங்களில் வரும்.

  கி.பி.1971

  நன்.எழுத்து.12

  மா.நன்னன்

- கடித முகவரியின் இறுதியிலும், திகதியின் இறுதியிலும் வரும்.

  கலைமகள் வீதி,

  மட்டக்களப்பு.

  12.06.2015.

**வினாக்குறி / வினாவிசைக்குறி ( ? )**

- வினாவாக்கியத்தின் இறுதியில் வரும்.

  உண்மை எது?

- சந்தேகத்தைக் குறிப்பிடும்போது வரும்.

  நன்னூலும் ஐந்து இலக்கணங்களைக் கூறியதாக இருந்தது என்பர ஒரு சாரார்?

**மெய்ப்பாட்டுக்குறி / உணர்ச்சிக்குறி.**

- வியப்பு, இரக்கம், துன்பம், அருவருப்பு, வெறுப்பு என்பன போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்த உதவுகின்றது.

  ஆகா ! என்ன அழகு.

  சீ ! நீ வெளியேறு !

**காற்புள்ளி (,)**

- ஒரு தொடராக வரும் சொற்களையும் சொற்றொடர்களையும் தனித்தனியாகப் பிரித்துக் காட்டுவதற்கு பயன்படுகிறது.

  - இலங்கை, இந்தியா, நேபாளம், பூட்டான், பாகிஸ்தான், வங்காளதேசம், மாலைதீவு, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் தென்கிழக்காசிய நாடுகளே.
  - காலையில் துயில்விட்டெழுதல், கடவுளை மனம் உருகித்தொழில், அவரவர்க்கேற்ற உடற்பயிற்சிகளை காலையிலேயே செய்தல், என்பன போன்ற பழக்கங்கள் ஒருவரின் வாழ்வில் வெற்றிக்கு உறுதுணையாக அமைவன.

- வாக்கியத்தில் எழுவாய் நீண்டதொடராக இருக்கும்போதும் எழுவாயை அடுத்து இக்குறியீடு வரும்.

  - அழகும் இளமையும் அறிவும் நிறைந்த இராமன், வில்வித்தையையும் திறமையாகக் கற்றான்.

- வாக்கியத்தில் பொருள் மயக்கத்தை நீக்கவும் இக்குறியீடு பயன்படும்.

  வினை, தெரிநிலைவினை எனவும் குறிப்பு வினை எனவும் இருவகைப்படும்.

  ஆதலால், ஆகையால், ஆகவே, ஆயினும், இனி, என்றாலும், எனவே, என்பன போன்ற இணைப்புச் சொற்களை அடுத்துவரும்.

  (ஆதலால், ஆகையால், ஆகவே, ஆயினும், இனி, என்றாலும், எனவே, என்பன போன்ற இணைப்புச் சொற்களை அடுத்துவரும்.)

  நான் முன்னேற விரும்பினேன். அதற்காக, கடுமையாக உழைக்கத் தொடங்கினேன்.

நான் முன்னேற விரும்பினேன். அதற்காக, கடுமையாக உழைக்கத் தொடங்கினேன்.ஆதலால், ஆகையால், ஆகவே, ஆயினும், இனி, என்றாலும், எனவே, என்பன போன்ற இணைப்புச் சொற்களை அடுத்துவரும்.

நான் முன்னேற விரும்பினேன். அதற்காக, கடுமையாக உழைக்கத் தொடங்கினேன்.

இனி, உரையாடலைத் தொடங்குவோம்.

முகவரி எழுதும்போது,

பரீட்சை ஆணையாளர்,

பரீட்சைத் திணைக்களம்,

இசுறுபாய.

**அடைப்புக்குறி [ (.......) ]**

ஒரு விடயத்தை எழுதும் போது சான்றாதாரம், வரைவிலக்கணம், விளக்கம், பிறமொழிச் சொற்பிரயோகம் என்பன பயன்படுத்தப்படும்போது இக்குறியீடு பயன்படுத்தப்படுகின்றது.

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே (தொல்)

இணையம் (Internet) இன்று எல்லோருக்கும் கிடைக்கத்தக்க ஊடகமாக மாறியுள்ளது.

ஏற்றுமதி, இறக்குமதி பற்றிக் கணக்குப்பதிவு (சென்மதி நிலுவை) எமது நாட்டுக்குச் சாதகமாக அமையும்.

வீட்டுத்தளபாடங்கள் ( கதிரை, மேசை, கட்டில்) ஏலத்தில் விற்கப்படுகின்றன.

**மேற்கோட்குறி**

பிறருடைய கூற்றை அப்படியே எடுத்தாளும்போது மேற்கோட்குறி இடப்படுகின்றது.

‘‘புதுமைப்பித்தனை நீக்கிவிட்டுத் தமிழ் சிறுகதை வரலாற்றைப் பார்க்கமுடியாது என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறுவார்.

‘‘ஏறுபோல் நட’’ என்பது சான்றோர் கூற்று.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- நிறுத்தக் குறிகளற்ற பந்தி
- நிறுத்தக் குறிகள் உள்ள பந்தி
- டிமைன்தாள்
- எழுதுகருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- நிறுத்தக் குறிகளின் பயன்பாட்டை அறிந்து பிரயோகிப்பார்.
- பொருளை நன்கு புலப்படுவதற்கு நிறுத்தக் குறிகள் உரியவாறு பயன்படுத்தப்பட வேண்டுமென அறிந்து துலங்குவார்.
- நிறுத்தக் குறிகளைப் பொருத்தமாகப் பயன்படுத்தி, தமது ஆக்கங்களை முன்வைப்பார்.

**தேர்ச்சி 6.0** : கிரகித்துப் பொருள் உணர்ந்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 6.2** : பல்வேறு நோக்கங்களுக்காக வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம் :** கடமை

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்**

- கடமை எனும் பாடப்பரப்பைக் கருத்தூன்றி மௌனமாக வாசிப்பார்.
- அப்பகுதியில் இடம்பெறும் பிரதான கருத்தையும் துணைக்கருத்துக்களையும் இனங்கண்டு எழுதுவார்.
- மனிதனுக்குள்ள ஒரே தலையாய கடமை, பிறர் நலம் பேணுதலே என்பதற்கு ஆதாரங்களை முன்வைப்பார்.
- கடமை என்னும் பாடப்பரப்பில் இடம்பெறும் விழுமியக் கருத்துக்களைத் தமக்குள் கலந்துரையாடி, பட்டியற்படுத்திக் கூறுவார்.
- மேலும் பல விழுமியக் கருத்துக்களைக் கையாண்டு தமது ஆக்கங்களைப் படைப்பார்.
- பாடல்களில் காணப்படும் கற்பனைத் திறன்களை இனங்கண்டு, எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- விழுமியம் பற்றிக் கலந்துரையாடிப் பாடத்தினை ஆரம்பித்தல்.
- பாடப்பரப்பில் இடம்பெறும் விழுமியங்களை உள்வாங்கும் வகையில் வினாக்கேட்டு மாணவர்களைச் செயற்பட வைத்தல்.
- பல்வேறு தகவல்களைச் சேகரிக்கும் விதமாக மௌனமாக வாசிக்கச் செய்தல்.
- கடமை, சுயநலம், பிறர் நலம்பேணுதல் என்பன பற்றி, கட்டுரை ஆசிரியர் கூறும் கருத்தை வாசித்துக் கூறச்செய்தல்.
- புதிய ஆக்கங்களைப் படைக்க வழிகாட்டுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key Words) , எண்ணக்கருக்கள்**

- விழுமியக் கருத்துக்கள் தொடர்பான சொற்களுக்குப் பொருள் காண்க.
  - அறம், பொருள், இன்பம், வீடு
  - கடமை உணர்ச்சி
  - சுயநலம் / பிறர் நலம்பேணுதல்
  - தர்மம்
  - கடமை
  - நாணயம்
- விழுமியக் கருத்துக்கள் தொடர்பான பழமொழிகள்.
  - ஊரார்பிள்ளையை ஊட்டி வளர்த்தால்
  - தன் பிள்ளை தானே வளரும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாட நூல்
- விழுமியக் கருத்துக்கள் கொண்ட அட்டைகள்
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- பாடப்பரப்பை மௌனமாக வாசிப்பார்.
- தாம் கிரகித்தவற்றைக் குழுச்செயற்பாட்டின் மூலம் பட்டியற்படுத்துவார்.
- பாடப்பரப்பில் இடம்பெறும் விழுமியக் கருத்துக்களை இனங்கண்டு கூறுவார்.
- கற்பனைத் திறன்களை எடுத்துக் காட்டுவார்.
- இதுபோன்ற வேறு ஆக்கங்களை எழுதிக்காட்டுவார்.

**தேர்ச்சி 1.0 :** பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தரப்பங்களுக்கும் ஏற்ப வினைத் திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.1 :** எழுத்துக்களின் ஒலிப்புக்கேற்ப, சொற்களைச் செம்மையாக உச்சரிப்பார்.

**விடய உள்ளடக்கம் : லகர, ழகர, ளகர, ணகர, நகர, னகர, ரகர, றகர, ஆகிய எழுத்துக்களாலான சொற்கள்**

**பாடவேளைகள் :** 02

### கற்றற் பேறுகள்

- லகர, ழகர, ளகர, னகர, நகர, ணகர, ரகர, றகர ஆகிய எழுத்துக்களின் பிறப்பிடங்களையும் ஒலிப்பிடங்களையும் அறிந்து கூறுவார்.
- அறிந்தவற்றைக் கிரகித்து அவ்வெழுத்துக்களைச் செம்மையாக உச்சரித்துக் காட்டுவார்.
- அவ்வெழுத்துக்களை உள்ளடக்கிய சொற்களைச் செம்மையாகக் கூறுவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- எழுத்தின் ஒலி வேறுபாட்டிற்கேற்ப, எழுத்துக்களை உச்சரிக்கச் செய்தல்.
- இவ்வெழுத்துக்களை உரியவாறு உச்சரித்துக்காட்டுகின்ற மற்றும் இவ்வெழுத்துக்கள் கொண்ட சொற்களைச் செம்மையாகச் சொல்லிக்காட்டுகின்ற ஒலிநாடாவை ஒலிக்கவிட்டுச் செவிமடுக்கச் செய்தல்.
- ஆசிரியர், எழுத்துக்களைச் செம்மையாக உச்சரிக்க, அதைச் செவிமடுத்து உரிய எழுத்தைத் தெரிவு செய்யுமாறு மாணவர்கட்குச் சொல்லுதல்.
- சொல்லட்டைகளைக் கொடுத்து, சொற்களைச் செம்மையாக கூறச் செய்தல்.
- எழுத்துக்களின் பிறப்பிடங்களையும் ஒலிப்பிடங்களையும் அறிந்து கூறுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

### முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்

- கலி, கழி, களி
- வண்டு, ஒன்று, பந்து
- கணம், தனம், நலம்
- வரம், அறம்
- மார்பு, வெற்பு
- துன்பம், இன்பம்
- இலங்கை, இளமை, வாழ்க்கை

### மெய்யெழுத்துக்களின் ஒலி வேறுபாட்டை இனங்கண்டு பயன்படுத்துதல்.

- லகரம், ழகரம், ளகரம் முதலான எழுத்துக்களின் வேறுபாடுகளை அறிந்து சொற்களை உச்சரித்தல்.
- லகரம், நுனி நா நுனி அண்ணத்தைப் பொருந்த உச்சரிக்கப்படுவதை அறிந்து உச்சரித்தல்.
- ழகரம், ளகரம் ஆகிய மெய்யெழுத்துக்கள் நுனி நா மேல்நோக்கி வளைந்து நடு அண்ணத்தை தொடுமாறு உச்சரித்தல்.

- ‘ள’, என்னும் எழுத்துக்கு பதிலாக ‘ழ’ என்ற எழுத்து இடம்பெறும் போது பொருள் வேறுபடுவதை அறிந்து எழுதுதல்.

  உதாரணம் - அளி, ஆள், கோளை, தாள் பலி, வாள்,

  அழி, ஆழ், கோழை, தாழ், பழி, வாழ்
- லகரத்துக்கு பதிலாக ளகரம் இடம் பெறும் போது பொருள் வேறுபடுவதை அறிந்து எழுதுதல்.

  உதாரணம் - ஒலி, கலம், கலப்பு, தலம், வலம்,

  ஒளி, களம், களப்பு, தளம், வளம்
- லகரத்துக்கு பதிலாக ழகரம் இடம் பெறும் போது பொருள் வேறுபடுவதை அறிந்து கூறுதல்.

  உதாரணம் - கலி, கிலி, பலம், களைப்பு,

  கழி, கிழி, பழம், கழ்ப்பு (சோம்பல்)

- ணகர, நகர, னகர ஒலி வேறுபாடுகளை அறிந்து செயற்படுவார்.
- நகரம், நுனி நா மேற் பல்லின் உட்புறத்தைப் பொருந்த உச்சரிக்கப்படும் என்பதை அறிவார்.
- நகரம், தகரத்துக்கு முன்பு வரும் போது மட்டும் நுனி நா பல்லோடு பொருந்த உச்சரிக்கப்படுவதை அறிவார்.
- உ + ம் - சந்தை, பந்து, தொந்தி, இந்த
- ணகரம், நுனி நா மேல் நோக்கி வளைந்து ந் அண்ணத்தை தொட உச்சரிக்கப்படும் என்பதை அறிவார்.
- னகரம், நுனி நா நுனி அண்ணத்தைப் பொருந்த உச்சரிக்கப்படுவதை அறிந்து உச்சரிப்பார்.
- ணகரத்துக்கு பதிலாக னகரம் இடம்பெறும் போது பொருள் வேறுபடுவதை அறிந்து எழுதுவார்

  உ + ம் - அன்னம், என், கான், தன், மன்,

  அண்ணம், எண், காண், தண், மண்
- ரகரம், றகரம் ஆகிய இரண்டும் நுனி நா, நுனி அண்ணத்தைப் பொருந்த உச்சரிக்கப் பட்டாலும் இவ்விரு எழுத்துக்களும் உச்சரிப்பு முறையில் வேறுபடுவதை அறிந்து உரைப்பர்.
- ரகரத்துக்குப் பதிலாக றகரம் இடம்பெறும் போது பொருள் வேறுபடுவதை அறிந்து எழுதுவார்.
- உ + ம் - அரம், அரி, அரை, கரை, சிரை, பரி, மரம்

  அறம், அறி, அறை, கறை, சிறை, பறி, மறம்

### தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- உரிய எழுத்தட்டைகள்
- பொருத்தமான சொல்லட்டைகள்

### கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- எழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளை இனங்கண்டு, அதற்கேற்ப எழுத்துக்களை உச்சரிப்பார்.
- இவ்வெழுத்துக்களைக் கொண்ட சொற்களைச் செம்மையாகச் சொல்லிக்காட்டுவார்.
- இவ்வெழுத்துக்களைக் கொண்ட சொற்களை வகைப்படுத்தித் தொகுப்பார்.

**தேர்ச்சி 8.0 :** அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, இலக்கண வழுவின்றி, உரிய நிறுத்தக் குறிகளுடன் ஆக்கங்களைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 8.2 :** அவதானித்துக் கேட்டுக் கிரகித்தவற்றை வழுவின்றி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம் :** சொல்வதெழுதுதல்

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள்**

- சொல்வதெழுதுதலின்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடல் மூலம் விளக்கிக் கூறுவார்.
- சொற்களுக்கிடையே இடைவெளிவிட்டு எழுதுவார்.
- எழுத்துப் பிழையின்றி வாக்கியங்களை எழுதுவார்.
- குறியீடுகளைக் கையாண்டு ஒரு பந்தியாக எழுதுவார்.
- ஆசிரியர் கூறுவதை அவதானமாகச் செவிமடுத்து எழுதுவார்.
- ஒலி பேதங்களை அவதானித்து எழுத்துப் பிழைகளின்றி எழுதுவார்.
- தாம் எழுதியதை மீளவும் வாசித்துத் திருத்தங்கள் செய்வார்.
- இலக்கணப் பிழைகளின்றி, எழுத்துப் பிழைகளின்றி எழுதப்பட்டுள்ளதா என மீளச் சரிசெய்து எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பொருத்தமான பாடப்பிரவேசத்தைத் திட்டமிட்டு மாணவருக்கு முன்வைத்தல்.
- சொல்வதெழுதுதலுக்குரிய பந்தியைச் சொற்கள் சொற்களாக ஏற்ற தொனிபேதங்களுடன் உச்சரித்துக் கூறுதல்.
- ஆசிரியர் கூறுவனவற்றைச் செம்மையாகக் கிரகித்துப் பிழைகளின்றி எழுத வழிகாட்டல்.
- ஒரு தடவை கூறி எழுதச் செய்தல், மீண்டும் விரைவுபடுத்திக் கூறி, மாணவர் தாம் எழுதியதை திருத்தம் செய்யவும் வழிகாட்டல்.
- போதிய அவகாசம் கொடுத்து அவரவர் எழுதியதை மீளவும் திருத்தம் செய்ய வழிகாட்டல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key Words) , எண்ணக்கருக்கள்**

- சொல்வதெழுதுதல் கொடுப்பதற்கான பொருத்தமான பந்திகள்
- நிறுத்தக் குறியீடுகளைக் காட்டும் அட்டைகள்.

### தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- பொருத்தமான பந்திகள்
- பத்திரிகைகள்
- எழுதுதாள்
- எழுதுகருவி

### கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- சொல்வதெழுதுதலின்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களை விளக்கிக் கூறுவார்.
- சொற்பிழைகளின்றியும் சொற்களுக்கிடையில் இடம்விட்டும் எழுதவேண்டிய முறை பற்றியும் அறிந்து, அதற்கேற்ப எழுதுவார்.
- தாம் எழுதியதை, ஏற்ற குறியீடுகள் இட்டு, திருத்தம் செய்து பிழையறப் பூரணப்படுத்துவார்.

## பின்னிணைப்பு

**சொல்வதெழுதக.**

தமிழ் பேசும் மக்கள் ஈழத்திலே பல நூற்றாண்டுகளில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த பகுதிகளுள் மட்டக்களப்புப் பிரதேசமும் ஒன்றாகும். மட்டக்களப்பிலுள்ள நாட்டுக் கூத்துக்கள் வடமோடி, தென்மோடி என இருவகைப்படுத்திக் கூறப்படும். இலங்கையில் பயிலப்படும் மரபுவழி நாடகங்களுள், புராதன சம்பிரதாயங்களுடன் நெறி பிறழாது போற்றப்பட்டு வருபவை மட்டக்களப்பிலுள்ள மரபுவழி நாடகங்களே. இவற்றை நாட்டுக் கூத்து என்பர். நாட்டுக் கூத்து எனும் சொற்றொடரில் வரும் கூத்து எனும் சொல் கதை தழுவிவரும் ஆட்டத்தைக் குறிப்பது. 'நாட்டு' எனும் சொல் கிராமத்தைக் குறிப்பது. அதுவே புராதனத்தை எடுத்துணர்த்துவதாக உள்ளது. மட்டக்களப்பு நாட்டுக் கூத்துக்கள் மரபுத் தொடர்ச்சியை நன்கு ஏடுத்துக் காட்டுகின்றன.

'நாட்டுக் கூத்து' என இழி மொழியில் குறிப்பிடப்பட்டு வந்த கலை இன்று மக்கள் கலையென மக்கள் மனதினில் உயர்ந்து நிற்கின்றது. இத்தகைய மக்கள் கலை புனருத்தாரணம், சமூக வாழ்வும், வாழ்வு நெறியும் மாறுகிற போது தோன்றுவதாகும். கூத்து என்பது ஆடலும் இசையும் சேர்ந்தது. இது மக்கள் நிலையில் வைத்து பயிலப்படும் ஒரு கலை. இக் கூத்து பூர்வீக சமூக அமைப்பு மாறுங் காலத்து பொழுது போக்குக்குரிய சாதனமாக மாறும் என்கிறர் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள்.

கலாசார ஒற்றுமையினையும் தனித்துவத்தையும் காட்டும் காலாசாரக் கூறுகளுள் ஒன்று ஈழத்துத் தழிழரிடையே காணப்படும் கூத்து மரபாகும். இது நிகழ்த்திக் காட்டப்படும் ஒரு கலையாகும் என பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களும்,கூத்தின் வளர்ச்சியிலுள்ள முக்கிய அம்சங்கள் யாவும் நாட்டுக் கூத்துக்கள் என இன்று குறிப்பிடப்படும் நாடகங்களிலே நன்கு மிளிர்கின்றன எனப் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களும் கூறுகிறார். பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் குறிப்பிடுமிடத்து, கரணங்களின் அடிப்படையாக நாடகம் உருவாகியது எனவும், மனிதரிடையே இயல்பாக ஒன்றைப் பிரதி செய்யும் பண்பு இருப்பதனால் அவன் மனித நடவடிக்கைகளையும் தெய்வ நடவடிக்கைகளையும் பிரதி செய்ய முற்படுகையில் நாடகம் உருவாகியது எனவும், இறைவனே நாடகத்தைத் தோற்றுவித்தான் எனவும், நடனத்தில் இருந்தே நாடகம் உருவாகியது எனவும், நாடகத் தோற்றம் பற்றிப் பல்வேறு கொள்கைகள் இன்று நிலவுகின்றன என்றார்.

**தேர்ச்சி 10.0 :** எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, வழுவின்றி எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 10.1 :** வழுக்களின்றி வாக்கிய அமைதியோடு எழுதுவார்.

**விடய உள்ளடக்கம் :** வாக்கியம் அமைத்தல்

**பாடவேளைகள் :** 04

**கற்றற் பேறுகள்**

- வாக்கியங்களை வழுக்களின்றி எழுதவேண்டிய விதம் பற்றி அறிந்து அதற்கேற்ப எழுதுவார்.
- வாக்கிய உறுப்புக்களை இனங்கண்டு அதனைப் பட்டியற்படுத்துவார்.
- வாக்கியங்களில் திணை, பால், எண், இடம், காலம் என்பன இயைபுற அமைய வேண்டியதை, உதாரணத்துடன் எழுதுவார்.
- அடைமொழிகளைப் பொருத்தமுறக் கையாண்டு, எழுதவேண்டிய முறை பற்றி விளக்குவார்.
- எழுவாய், பயனிலை இயைபுபெறப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெற்றுப் பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பொருத்தமான பாட அறிமுகத்தை முன்கூட்டியே திட்டமிடல்.
- பல்வேறு வாக்கிய அமைப்பில் அமைந்த வாக்கியங்களை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்தி அவர்களை அவதானிக்கச் செய்தல்.
- அந்த வாக்கியங்களில் இடம்பெறும் வாக்கிய உறுப்புகளை அட்டவணைப்படுத்தச் செய்தல்.
- வாக்கியங்களில் கருத்துக்கள் எழுகின்ற இடம் எழுவாயாகவும் கருத்து முடிகின்ற இடம் பயனிலையாகவும் அமைவதை எடுத்துக்காட்டுதல்.
- வாக்கியங்களில் இடம்பெறும் சொற்களுக்குத் திணை, பால், எண், இடம், காலம் என்பனவற்றை அட்டவணைப்படுத்தி எழுதுதல்.
- மேலதிக வாக்கியங்களை மாணவர்களுக்குக் கொடுத்து, குழுநிலையில் துலங்கி வாக்கிய உறுப்புக்களை இனங்காணச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

**திணை** - உயர்திணை, அஃறிணை

**எண்** - ஒருமை, பன்மை

**பால்** - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்

**இடம்** - தன்மை, முன்னிலை, படர்க்கை

**காலம்** - இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்

**வாக்கிய உறுப்புக்கள்**

**எழுவாய்** : கருத்து ஒன்று எழுகின்ற இடம் அல்லது, பேசுபவன் கருத்தை எடுக்கின்ற இடம்.

**செயப்படுபொருள்** : வினையின் பயனைக் கூறுவது.

**பயனிலை** : வாக்கியம் ஒன்றினது கருத்து முற்றுப்பெற்று நிற்பது.

**உதாரணம்** : ஓய்வு நேரங்களில் சுவாமி விபுலாநந்த அடிகள் இலக்கண, இலக்கியங்களைக் கற்றார்.

**எழுவாய்** - சுவாமி விபுலாநந்த அடிகள். இது கருத்து எழும் இடமாகும்.

**பயனிலை** - கற்றார் - இங்கு கருத்து முடியும் இடம் பயனிலை.

**செயப்படுபொருள்** - சுவாமி விபுலாநந்தர் எதனைக் கற்றார் - இலக்கண இலக்கியங்களை. ஆகவே, இலக்கண இலக்கியங்கள் என்பது செயப்படுபொருளாகும்.

- அடைமொழிகள் - வாக்கிய உறுப்புகள் ஒவ்வொன்றினையும் விளக்கியும் விரித்தும் வருவதாகும்.

**வாக்கியம்**

- மாடு வேலியால் பாய்ந்தது

**அடைமொழி**

**வெள்ளை** மாடு **கம்பி** வேலியால் **வேகமாகப்** பாய்ந்தது என அடைமொழியுடன் இந்த வாக்கியம் அமையும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- வாக்கியங்கள் எழுதிய அட்டைகள்
- டிமைன்தாள்கள்
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- வாக்கியங்களில் இடம்பெறும் வாக்கிய உறுப்புக்களைக் கண்டறிந்து அட்டவணைப்படுத்துவார்.
- வாக்கியங்களில் இடம்பெறும் அடைமொழிகளைக் கண்டறிந்து எழுதுவார்.
- வாக்கியங்களைக் கொடுக்குமிடத்து, அவற்றில் இடம்பெறும் திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றை இனங்கண்டு, அட்டவணைப்படுத்துவார்.

**தேர்ச்சி 7.0 :** இரசனைக்காகவும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 7.1 :** படைப்புக்களை வாசித்து நயப்பார்.

**விடய உள்ளடக்கம் : காட்டு விலங்குகளைக் காப்போம்.**

**பாடவேளைகள் :** 03

**கற்றற் பேறுகள்**

- காட்டு விலங்குகளைப் பற்றிக் கூறுவார்.
- விலங்குகள், பறவைகள் என்பனவற்றை வகைப்படுத்திக் கூறுவார்.
- விலங்குகளால் கிடைக்கும் பயன்களைக் கூறுவார்.
- காட்டு விலங்குகள் அருகிவருவது பற்றிக் கூறுவார்.
- விலங்குகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தை எடுத்துக் கூறுவார்.
- காடுகளால் மக்களுக்குக் கிடைக்கும் பயன்களைப் பற்றிப் பட்டியற்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- விலங்குகளைப் பற்றிக் கலந்துரையாடி பாடத்தினை ஆரம்பித்தல்.
- மாணவர்களைப் பாடத்தை வாசிக்கச் செய்து வழிப்படுத்தல்.
- விலங்குகளால் மனிதனுக்குக் கிடைக்கும் பயன்களைக் கூறுதல்.
- காடுகளால் மனிதனுக்குக் கிடைக்கும் பயன்களைக் கூறுதல்.
- காடுகள் அழிக்கப்படுவதனால் ஏற்படும் தீமைகளைப் பற்றி, மாணவர் தமது கருத்துக்களை முன்வைக்க இடமளித்தல்.
- காடுகளையும் விலங்குகளையும் பாதுகாக்க வேண்டும் என்பதைக் கூறுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

- காட்டு விலங்கு பற்றிய விளக்கம்.
- காட்டு விலங்குகளும் காடழிப்பும் பற்றிய விளக்கம்.
- விலங்குகளுடன் தொடர்புடைய உவமைகள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- பறவைகள், விலங்குகள் அடங்கிய அட்டவணை
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- மிருகங்கள், பறவைகள் என்பவற்றைப் பட்டியற்படுத்துவார்.
- காடுகளால் மக்களுக்குக் கிடைக்கும் பயன்களைக் கூறுவார்.
- காட்டு விலங்குகளைப் பாதுகாக்க வேண்டும் என்பது பற்றிய சுவரொட்டி தயாரிப்பார்.
- காட்டு விலங்குகளைப் பாதுகாக்க வேண்டும் எனும் தலைப்பில் ஆக்கங்களைப் படைப்பார்.
- விலங்குகள் எனும் தலைப்பில் பேசுவார்.

## பின்னிணைப்பு

1. ஒட்டகப் பறவை என்று நெருப்புக் கோழி அழைக்கப்படுகின்றது. இந்தப் பறவையும் ஒட்டகத்தைப்போல தண்ணீர் குடிக்காமலே நீண்ட காலம் வாழக்கூடியது.
2. காகம் மணிக்கு 45 மைல்கள் வேகத்தில் பறக்கும்.
3. ஒரு சாதாரண பசு அதன் வாழ்க்கையில் இரண்டு இலட்சம் குவளை பால் கொடுக்கும்.
4. டொல்பின்கள் ஒரு கண்ணை மட்டும் மூடிக்கொண்டு தூங்கும்.
5. மனிதனுக்கு அடுத்தபடியாகச் சிந்திக்கும் திறனுள்ள பிராணி சிம்பன்ஸிக் குரங்கு.
6. பிறந்த யானைக்குட்டி ஆறு மாதங்கள் வரை தாய்ப்பாலை மட்டுமே குடிக்கிறது.
7. யானைக்கு நான்கு பற்களே உண்டு.
8. நில உருண்டையின் கடும் உறைபனி உள்ள இடத்தில் வாழுவது பனிக்கரடி(துருவக் கரடி)

**தேர்ச்சி 10.0** : எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, வழுவின்றி எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 10.2** : கருத்துப் புலப்படுமாறு பந்தி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : **உரைநடைப் பகுதி**

- **பந்திகள்**
- **கட்டுரைகள்**
- **பத்திரிகைகள்**

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்**

- பந்தியொன்று அமைய வேண்டிய முறை பற்றித் தாம் அறிந்தவற்றைக் கூறுவார்.
- பந்தி ஒன்றை எழுதுவதற்குமுன் குறிப்புகளைத் தயாரிப்பார்.
- தலைப்பு ஒன்றின்கீழ் அமைய வேண்டிய விடயங்களைப் பட்டியற்படுத்துவார்.
- பந்தியில் முதல் வாக்கியத்தைக் கொடுத்து தலைப்பை விளக்குவதாக அமைப்பார்.
- பந்தி எழுதுவதற்கான தலைமைக் கருத்தைத் திட்டமிடுவார்.
- தலைமைக் கருத்தை அடியொற்றுவதாக துணைக்கருத்துக்கள் அமைய வேண்டியதை விரித்து எழுதுவார்.
- வாக்கிய இயைபுபெற, பந்தி ஒன்றை எழுதுவார்.
- கருத்துத் தொடர்புடையதாக வாக்கியங்களை ஒன்றிணைத்து பந்தியாக எழுதுவார்.
- பந்தி அமைவதற்கான உரிய ஒழுங்கு முறையைக் கையாண்டு எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பந்தி ஒன்றை வாசித்துக் காட்டி, கலந்துரையாடிப் பாடத்தை ஆரம்பித்தல்.
- பந்தி ஒன்றினை எழுதும்போது தெளிவான கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட வேண்டுமென மாணவர்களுக்கு விளக்குதல்.
- பந்தியொன்று மிக விரிவானதாகவோ, மிகக் குறுகியதாகவோ அமையக்கூடாதென விளக்குதல்.
- மாணவரைக் குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவக்கும் ஒவ்வொரு தலைப்புக் கொடுத்து எழுதுவித்தல்.
- அவர்கள் எழுதிய பந்தியை வகுப்பில் முன்வைக்கச் செய்து, அப்பந்தி அமைப்புப் பற்றி கலந்துரையாடி மேலதிக விளக்கமளித்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key Words) , எண்ணக்கருக்கள்**

- பந்தி அமைக்கும் முறையைத் தலைப்பு ஒன்றுடன் ஆதாரங்காட்டி விளக்குதல்.
- தலைமைக் கருத்தையும் துணைக்கருத்துக்களையும் வேறுபடுத்தி எழுதுதல்.
- கருத்துத் தொடர்புடன் உரிய ஒழுங்கு முறையில் பந்தி எழுதுதல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பந்திகள் சிலவற்றை ஒட்டிய டிமைன்தாள்கள்
- எழுதுகருவிகள்
- எழுதுதாள்கள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- கொடுத்த தலைப்பில் குழுவாக இயங்கி பந்தி எழுதுவார்.
- பந்தி அமைக்கும் முறை பற்றி எடுத்துக் கூறுவார்.
- வாக்கிய இயைபினைக் கையாண்டு பந்தி எழுதுவார்.

**தேர்ச்சி 13.0 :** மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.1 :** எழுத்துக்களின் ஒலிப்பு முறையையும் வகை தொகையையும் அறிந்து பயன்படுத்துவார்.

**விடய உள்ளடக்கம் :** கட்டுரை

**பாடவேளைகள் :** 04

## கற்றற் பேறுகள்

- லகர, ழகர, ளகர, ணகர, நகர, னகர, ரகர, றகர, எழுத்துக்களின் ஒலிப்பு முறையைச் சரியாக அறிந்து, அவ்வெழுத்துக்களைச் செம்மையாக உச்சரித்துக் காட்டுவார்.
- இவ்வெழுத்துக்களைக் கொண்ட சொற்களைச் செம்மையாகச் சொல்லிக் காட்டுவார்.
- இச்சொற்களை வைத்துப் பொருள் புலப்படுமாறு வாக்கியங்கள் எழுதிக் காட்டுவார்.
- குறில், நெடில் வேறுபாடுகளை அறிந்து சொற்களையும் வாக்கியங்களையும் அமைப்பார்.
- உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள் உயிர்மெய்யெழுத்துக்கள், ஆய்த எழுத்து, சுட்டெழுத்துக்கள் பற்றி எடுத்துக் கூறுவார்.
- கிரந்த எழுத்துக்கள் மற்றும் அவற்றின் பிரயோகம் பற்றித் தெளிவாகக் கூறிக்காட்டுவார்.
- கட்டுரை எழுதும்போது இத்தகைய சொற்களைச் செம்மையாகக் கையாளுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- எழுத்தட்டைகள், சொல்லட்டைகளை உருவாக்கி அவற்றை மாணவர்களை வாசிக்கச்செய்தல்.
- செயற்பாட்டுப்பத்திரங்கள் ஊடாக எழுத்துக்களை, சொற்களை இனங்காணச் செய்தல்.
- சிறுசிறு வாக்கியங்கள் எழுத வழிகாட்டுதல்.
- உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம், சுட்டு, கிரந்த எழுத்துக்களை இனங்காண எழுத்தட்டைகளைத் தயாரித்து காட்சிப்படுத்தல்.
- எழுத்துக்களின் தொகைகளை இனங்காணும் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

## முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்

| | |
|---|---|
| உயிர் எழுத்துக்கள் - | 12 |
| மெய் எழுத்துக்கள் - | 18 |
| உயிர் மெய் எழுத்துக்கள் - 12 X 18 = | 216 |
| ஆய்த எழுத்து - | 01 |
| | ........ |
| | 247 |
| | ........ |

- உயிர் எழுத்துக்களை குறில், நெடில் என வகுக்கலாம்.
  - குறில் - அ, இ, உ, எ, ஒ
  - நெடில் - ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஐ, ஔ

மெய் எழுத்துக்களின் உச்சரிப்பு முறைளைத் தெளிவாக வெடிப்பொலி, மூக்கொலி என வகைப்படுத்தி ஒலித்துக்காட்டல்.

உதாரணம் :- வல்லினம் - க், ச், ட், த், ப், ற் - வெடிப்பொலிகள் அல்லது தடை ஒலிகள்.

மெல்லினம் - ங், ஞ், ண், ந், ம், ன் - மூக்கொலிகள்

இடையினம் - ய், ர், ல், வ், ழ், ள்

கிரந்த எழுத்துக்கள் - ஜ, ஸ, ஷ, ஹ (வடமொழிக் கலப்பினால் தமிழில் புகுந்த எழுத்துக்கள்)

ஸ்ரீ, ~ - (தற்காலத் தமிழில் அரிதாக வழக்கில் உள்ள எழுத்து)

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- எழுத்தட்டைகள்
- செயலட்டைகள்
- செயற்பாட்டுப் பத்திரங்கள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- எழுத்துக்களின் ஒலிப்பிடங்களைச் சரியாகக் கூறுவார்.
- எழுத்துக்களைச் சரியாக உச்சரிப்பார்.
- ஒலிப்பில் மயக்கம் கொண்ட சொற்களை அவற்றின் பொருள்பட வாக்கியங்களில் அமைத்துக் காட்டுவார்.
- குறில், நெடில் எழுத்துக்களை வேறுபடுத்திக் காட்டுவார்.
- எழுத்துக்களின் வகையையும் தொகையையும் கூறிக்காட்டுவார்.

**தேர்ச்சி 1.0 :** பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.2 :** பாடலை / செய்யுளைப் பொருளுணர்ந்து சொல்லுவார் / ஓதுவார்.

**விடய உள்ளடக்கம் :** ஐவேம்

**பாடவேளைகள் :** 04

## கற்றற் பேறுகள்

- செய்யுளை உள்ளபடி வாசித்துக் காட்டுவார்.
- செய்யுளைச் சந்தி பிரித்து, பொருள் தரும் விதத்தில் ஓதுவார்.
- செய்யுளில் இடம்பெறும் அரும்பதங்களுக்குப் பொருள் எழுதுவார்.
- செய்யுளை ஓசையோடு ஓதுவார்.
- உச்சரிப்புத் தெளிவுடன், செய்யுளில் இடம்பெறும் கருத்துக்கள் மனத்தில் பதியும் வண்ணம் சொல்லுவார்.
- செய்யுளைக் கேட்டுக் கிரகித்துத் தொகுத்து எழுதுவார்.
- சிறுமியின் ஆற்றலினை எடுத்துக் கூறுவார்.
- செய்யுளில் இடம்பெறும் அணிகளை விளக்கி எழுதுவார்.
- மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து, பாடற்பரப்பின் வினாக்களுக்கு விடை எழுதுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- செய்யுளை மௌனமாக வாசிக்கச் செய்தல்.
- அரும்பதங்களுக்குப் பொருள் எழுத வழிகாட்டல்.
- செய்யுள் கூறும் பொழிப்பை எழுதும் விதம் பற்றி, போதிய விளக்கம் கொடுத்தல்.
- மாணவரைப் பாடச்செய்து, ஏனையவரை கேட்டுக் கிரகிக்கச் செய்தல்.
- சொல்நயம் பொருள்நயமிக்க செய்யுள்களைத் தேடிப்பெற வழிகாட்டல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

## முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்

- அழகசுந்தர தேசிகர் பற்றிய தேடல்.
- மொழிபெயர்ப்புப் பாடல் பற்றிய குறிப்புக்கள்.
- **அரும்பத விளக்கம்**

| | | |
|---|---|---|
| காண்டீபம் | - | அருச்சுனனின் வில் |
| கோதண்டம் | - | இராமனின் வில் |
| கட்டழகி | - | பேரழகி |
| அமுதம் | - | அமிர்தம் |
| கணை | - | அம்பு |

| | | |
|---|---|---|
| பாங்கி | - | தோழி |
| நண்ணுதல் | - | வந்து சேருதல் |
| புங்கவர் | - | சிறந்தவர் |
| நவின்றாய் | - | சொன்னாய் |

### தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- செய்யுள் எழுதப்பட்ட டிமைன்தாள்
- இசையோடு பாடப்பட்ட ஒலிப்பேழை
- பாடநூல்
- காகிதாதிகள்

### கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- செய்யுளைப் பதம் பிரித்து ஓதுவார்.
- செய்யுளின் பொருளை எழுதுவார்.
- செய்யுளை உச்சரிப்புத் தெளிவோடு, பொருள் புரியும்வண்ணம் பாடுவார்.
- செய்யுளைக் கேட்டுக் கிரகித்து வினாக்களுக்கு விடை எழுதுவார்.
- சுயமாகப் படைப்பொன்றை ஆக்கிக்காட்டுவார்.
- செய்யுள் தரும் விழுமியப் பொருளைத் தொகுத்து எழுதுவார்.

**தேர்ச்சி 12.0 :** சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.1 :** சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம் :** **ஒத்த கருத்துச் சொற்கள்**
**எதிர்க் கருத்துச் சொற்கள்**

**பாடவேளைகள் :** 02

### கற்றற் பேறுகள்

- ஒத்த கருத்துச் சொற்கள், எதிர்க் கருத்துச் சொற்களின் முக்கியத்துவத்தை அறிந்து கூறுவார்.
- ஒத்த கருத்துச் சொற்களையும் எதிர்க் கருத்துச் சொற்களையும் இனங்கண்டு அட்டவணைப்படுத்துவார்.
- சொற்களின் பொருளை அறிந்து, பொருத்தமான வகையில் தமது ஆக்கங்களில் பிரயோகிப்பார்.
- சொற்களைச் செம்மையாகப் பிரயோகிக்கும் வழிவகைகளை அறிந்து பயன்படுத்துவார்.
- சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து கொள்வார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- ஒத்த கருத்துச் சொற்களினதும் எதிர்க்கருத்துச் சொற்களினதும் பயன்பாட்டை விளக்குதல்.
- ஒத்த கருத்துச் சொல்லென்றால் என்ன? எதிர்க் கருத்துச் சொல்லென்றால் என்ன? என்பதை விளக்குதல்.
- இருவகைச் சொற்களின் பொருளையும் விளக்குதல்.
- ஒரே கருத்துச் சொற்களையும் எதிர்க் கருத்துச் சொற்களையும் இனங்கண்டு, அட்டவணைப் படுத்த உதவுதல்.
- சொற்களஞ்சியத்தை பெருக்கிக்கொள்ள உதவுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

## முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்

- ஒரு சொல் நின்று பொருள் தரும் இடத்தில் அந்தச் சொல்லுக்குப் பதிலாக இன்னொரு சொல்லமைந்து அதே பொருளைத் தருமாயின் அச்சொல் ஒத்த கருத்துச் சொல் எனப்படும்.

  உதாரணம் :

  அழல் - நெருப்பு
  அடவி - காடு
  அகிலம் - ஞாலம், பூமி
  ஆதவன் - சூரியன், அருக்கன், பரிதி
  ஆழி - கடல்
  எழில் - அழகு, இளமை
  வில் - அம்பெய்வதற்குரிய கருவி

- ஒரு சொல்லுக்கு எதிரான பொருளைக் கொண்டிருக்கும் சொல்லை எதிர்க் கருத்துச் சொற்கள் எனலாம்.

  உதாரணம் -

  அகம் - புறம்
  அகழ்தல் - தூர்த்தல்
  இரகசியம் - பரகசியம்
  இறப்பு - பிறப்பு
  உதயம் - மறைவு

## தரவிருத்தி உள்ளீடுகள்

- அட்டவணைப்படுத்திய ஒத்த கருத்துச் சொற்கள் எதிர்க் கருத்துச் சொற்கள்
- எழுதுகருவிகள்
- டிமைன்தாள்கள்
- எழுதுதாள்கள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- சொற்களின் முக்கியத்துவத்தை அறிந்து கூறுவார்.
- சொற்களினை இனங்கண்டு அட்டவணைப்படுத்துவார்.
- சொற்களின் பொருளை அறிந்து பயன்படுத்துவார்.
- சொற்களைப் பொருத்தமான வகையில் ஆக்கங்களில் பயன்படுத்துவார்.
- சொற்களஞ்சிய விருத்தியுடன் தமது ஆக்கங்களை முன்வைப்பார்.
- ஒத்த கருத்துச் சொற்களையும் எதிர்க் கருத்துச் சொற்களையும் தமது ஆக்கங்களில் பொருத்தமாகக் கையாள்வார்.

**தேர்ச்சி 9.0** : வாசித்துக் கிரகித்தவற்றைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 9.1** : வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம் :** காந்தியடிகள் கடிதம்

**பாடவேளைகள்** : 05

**கற்றற் பேறுகள்**

- கடித அமைப்பினை அறிந்து அது பற்றிக் கூறுவார்.
- கடித அமைப்பிலான பாடத்தில் காந்தியடிகள் 'ஹகீம் அஜ்மல்கான்' என்பவருக்கு தன் சிறைவாழ்வு அனுபவத்தைப் புலப்படுத்தும்விதம் பற்றி விளங்கிக் கூறுவார்.
- அக்கடிதத்தில் தனது மனம் கவர்ந்த அல்லது, மனதிலே தாக்கத்தை ஏற்படுத்திய பகுதியை எடுத்துக் கூறுவார்.
- இது போலவே தனது அனுபவத்தைக் கடித அமைப்பில் எழுதிக் காட்டுவார்.
- பாடப்பரப்பில் இடம்பெறும் விழுமியக் கருத்துக்களை கடைப்பிடிக்க முன்வருவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- உறவுமுறைக் கடிதம் அமையும் விதம் பற்றிக் கலந்துரையாடிப் பாடத்தை ஆரம்பித்தல்.
- கடிதம் ஒன்று அமையும் விதம் பற்றிக் பொருத்தமான கற்பித்தல் சாதனமூடாக விளக்குதல்.
- வகுப்பிலே மாணவர் ஒருவரைக் கொண்டு பாடத்தை உரத்து வாசிக்கச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, வெவ்வேறு தலைப்புகளைக் கொடுத்துக் கடிதம் எழுதச்செய்தல்.
- மாணவர் எழுதிய கடிதத்தை வாசிக்கச்செய்து, கலந்துரையாடி, மேலதிக விளக்கத்தை வழங்கல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

- கடிதம் ஒன்று எழுதப்படுவதன் நோக்கம்.
- அதன் அமைப்பு.
- கடிதம் எழுதுபவரை முன்னிலைப்படுத்திக் கூறும் பாங்கு.
- மாதிரிக் கடிதம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- எழுதுகருவிகள்
- டிமைன்தாள்
- எழுதுதாள்கள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- கடிதம் எழுதப்படுவதன் நோக்கம் பற்றிக் கூறுவார்.
- கடிதமொன்றில் அமைய வேண்டிய உறுப்புகளைப் பட்டியற்படுத்திக் காட்டுவார்.
- கடிதம் எழுதுபவர், தனது எண்ணங்களைச் சுலபமாக வெளிப்படுத்த, கடித அமைப்பு உதவுவதைத் தமது அனுபவங்களிலிருந்து கூறுவார்.
- கடிதம் ஒன்றினை எழுதிச் சமர்ப்பிப்பார்.

## மாதிரிக் கடிதம்

மு. மதியழகன்,<br>
இல : 32,<br>
கே.கே நகர்,<br>
மதுரை,<br>
தமிழ்நாடு,<br>
இந்தியா.<br>
12.06.2015.


அன்புள்ள மகளுக்கு எழுதிக்கொள்வது,

படிப்பதற்காக இன்று நீங்கள் யாழ்ப்பாணம் சென்றிருக்கின்றீர்கள். நானும் வேலைக்காக இந்திய சென்றிருக்கின்றேன். உனது படிப்பில்தான் அப்பாவினுடைய உழைப்புத் தங்கியுள்ளது. படிப்பதனால்தான் ஒரு மனிதன் தலை நிமிர்ந்து நிற்க முடியும் என்பதனை நான் உங்களிடம் பல தடவைகள் கூறி இருக்கின்றேன். இன்று எமது நாட்டில் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் திறந்து விடப்பட்டிருக்கின்றன. இந்தச் சூழலைப் பயன்படுத்தி கற்பதில் முன்னிலையில் திகழ வேண்டும். நீங்கள் வீட்டில் மூத்த பிள்ளை நன்றாகப் படிக்க வேண்டும். மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். சவால்களை எதிர்கொண்டு வெற்றிபெற வேண்டும். கற்பதில் பின்னிற்கக் கூடாது. உதவி செய்ய வேண்டிய நேரத்தில் மற்றவர்களுக்கு உதவ முன்வரவேண்டும். தோல்வியைக் கண்டு துவண்டுவிடக் கூடாது. தோல்விதான் ஒருவருக்கு வெற்றிப்படியாக அமையும் என்பதனை மனதிலே கொண்டு செயற்பட வேண்டும். கோபம் வரும்போதெல்லாம் சகித்துக் கொண்டு வாழ வேண்டும். அது உங்களை வாழ்க்கையின் உச்சத்துக்குக் கொண்டு சென்றுவிடும். எப்போதும் தூர நோக்கோடு செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்படும்போது பல சோதனைகளும் வேதனைகளும் வருவதற்கு வாய்ப்புண்டு அவற்றையெல்லாம் பெறுத்துக் கொண்டு நேரிய வழியில் பயனிக்க வேண்டும். நேர்மைக்கு ஆண்டவன் என்றும் துணையாக இருப்பார். முயற்சியைக் கைவிட வேண்டாம்.

என்றென்றும் உங்கள் அப்பா,

...............................................<br>
(மு.மதியழகன்)

## பின்னிணைப்பு - 1



(02.10.1869 – 30.01.1948)

**இயற்பெயர் :** மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி (*Mohandas Karamchand Gandhi*)

**பிறந்த இடம் :** இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் உள்ள போர்பந்தர்.

மாகாத்மா காந்தியின் அறவழிப் போராட்டம் சத்தியாக்கிரகம் என்று அழைக்கப்பட்டது. அது இந்தியாவின் சுதந்திரத்துக்கு வழிவகுத்தது.

காந்திக்கு **மகாத்மா** என்னும் பட்டம் அளித்தவர் இரவீந்திரநாத் தாகூர்.

சத்தியசோதனை என்ற சுயசரிதை நூலை குஜராத்மொழியில் மாகாத்மா காந்தி எழுதினார். இந்நூல் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.



*இளமையில் காந்தி (1876)*



*தென்னாபிரிக்காவில் காந்தி (1906)*

**தேர்ச்சி 11.0 :** படைப்புகளை வாசித்து அனுபவங்கள் ஊடாக, படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 11.2 :** நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவார்.

**விடய உள்ளடக்கம் :** **உறவுமுறைக் கடிதம்**

**பாடவேளைகள் :** 04

**கற்றறந் பேறுகள்**

- கடிதத்தின் உறுப்புக்கள் பற்றி தெளிவுபடுத்துவார்.
- உறவுமுறைக் கடிதத்தின் தனித்துவ அம்சத்தை வெளிக்காட்டும் வகையில் கடிதமொன்றை எழுதிக்காட்டுவார்.
- பல்வேறு தேவைகளுக்காகக் கடிதங்களை எழுதுவார்.
- வழக்கத்திலிருந்து விசேடித்து வெளிப்படும் விடயத்தினைக் கடிதமாக எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- உறவுமுறைக் கடிதம், அழைப்பிதழ்கள், பத்திரிகைச் செய்திகள் என்பவற்றைக் காட்சிப்படுத்தல்.
- குழுக்களாக மாதிரி வளங்களைப் பார்த்து கிரகித்த பின்னர், சுயமாக கடிதம் ஒன்றை எழுதி முன்வைத்தல்.
- குறித்த நேரத்தினுள் கடிதமொன்றினை எழுத வழிப்படுத்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words), எண்ணக்கருக்கள்**

- கடித வகைகள்.
  1. உறவு முறைக் கடிதம்.
  2. தொழில் முறைக் கடிதம்.
- கடிதத்தின் பயன்பாடுகள்.
  - உறவு நிலைகள் வலுப்படுதல்.
  - கருத்துப் பரிமாற்றத்துக்கு உதவுதல்.
  - ஆக்கத்திறனை வளர்த்துக் கொள்ளல்.
  - தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளல்.

- **கடித உறுப்புக்கள்**

**உறவுமுறைக் கடிதம்**

I. அனுப்புபவரின் முழு முகவரியும், திகதியும் (வலதுபக்க மேல் மூலையில்)

24, பிரதான வீதி,
கொழும்பு - 03.
12.06.2016.

II. விளிப்பு

1. அன்புள்ள அம்மா, 2. அருமை நண்பா,

III. செய்தி

(அ) நலம் விசாரித்தல்
(ஆ) உள்ளடக்கச் செய்தி

IV. முடிப்பு

எழுதுபவருக்கும் பெறுபவருக்கும் இடையிலான தொடர்பு

உதாரணம் : உங்கள் அன்பு மகன்
அருமை நண்பன்

V. ஒப்பம்

கையெழுத்துக்குப் பின் நிறுத்தற்குறி எதுவும் எழுதப்படுவதில்லை.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- உறமுறைக் கடித மாதிரிகள்
- எழுதுதாள்கள்
- அழைப்பிதழ்கள்
- எழுதுகருவிகள்
- பத்திரிகைச் செய்தித் துணுக்குகள்
- பாடநூல்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- உறவுமுறைக் கடிதத்தில் அன்பு, பண்பு, தெளிவான விடயவெளிப்பாடு, முடிப்பு என்பன அமையுமாறு எழுதும் திறனை வெளிபடுத்துவார்.
- கடிதத்தில் செய்தியொன்றைத் தெளிவாக எழுதும் திறனை வெளிபடுத்துவார்.

**தேர்ச்சி 12.0 :** சொற்களஞ்சியத்தை விருத்திசெய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.1 :** சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து, செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம் :** **எதிர்ப்பாற் சொற்கள்**

**பாடவேளைகள் :** 02

### கற்றற் பேறுகள்

- எதிர்ப்பாற் சொற்களின் முக்கியத்துவத்தை அறிந்து துலங்குவார்.
- எதிர்ப்பாற் சொற்களை இனங்கண்டு, அட்டவணைப்படுத்துவார்.
- பொருத்தமான எதிர்ப்பாற் சொற்களை அறிந்து பிரயோகிப்பார்.
- எதிர்ப்பாற் சொற்களில் தாம்பெற்ற மொழித்திறன்களைத் தமது ஆக்கங்களில் பயன்படுத்துவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- ஏற்கெனவே அறிந்துகொண்ட எதிர்ப்பாற் சொற்களைக் கூறி, கலந்துரையாடி, பாடப்பிரவேசம் செய்தல்.
- எதிர்ப்பாற் கருத்துத் தரும் சொற்களை இனங்காணச் செய்தல்.
- எதிர்ப்பாற் சொற்களின் பயன்பாடு பற்றி விளக்குதல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, எதிர்ப்பாற் சொற்களைத் தேடித் தொகுக்கச் செய்தல்.
- எதிர்ப்பாற் சொற்களின் பொருளை விளக்கி, ஆக்கங்களில் பயன்படுத்த வழிசெய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

### முதன்மைப் பதங்கள் ( key words), எண்ணக்கருக்கள்

- ஆண்பாலுக்குரிய பெண்பாற் சொற்கள் அல்லது, பெண்பாலுக்குரிய ஆண்பாற் சொற்கள் **எதிர்ப்பாற் சொற்கள்** எனப்படும்.

அடியான் - அடியாள்
அப்பன் - அம்மை
அரசன் - அரசி
அழகன் - அழகி
ஆசிரியன் - ஆசிரியை

| | | |
|---|---|---|
| ஆடு | - | மகடூஉ |
| இடையன் | - | இடைச்சி |
| இந்திரன் | - | இந்திராணி |
| இல்லான் | - | இல்லாள் |
| உத்தமன் | - | உத்தமி |
| உழவன் | - | உழத்தி |
| ஊமையன் | - | ஊமைச்சி |
| ஐயன் | - | ஐயை |
| ஒருவன் | - | ஒருத்தி |
| கடா | - | மறி |
| கடுவன் | - | மந்தி |
| கணக்கன் | - | கணக்கச்சி |
| கணவன் | - | மனைவி |
| கலை | - | பிணை |
| களிறு | - | பிடி |
| காவற்காரன் | - | காவற்காரி |
| காளை | - | பசு |
| கிழவன் | - | கிழவி |
| குணவான் | - | குணவதி |
| குரு | - | குருத்தினி |
| சிவன் | - | சிவை |

## தரவிருத்தி உள்ளீடுகள்

- எதிர்ப்பாற் சொற்களடங்கிய அட்டவணை
- ஆண்பால், பெண்பால் அடங்கிய கட்டுரை / செய்யுள்
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- எதிர்ப்பாற் கருத்தைத் தரும் சொற்களை இனங்கண்டு துலங்குவார்.
- எதிர்ப்பாற் கருத்தைத் தரும் சொற்களைப் பட்டியற்படுத்துவார்.
- எதிர்ப்பாற் சொற்களைப் பொருத்தமுறப் பயன்படுத்துவார்.
- எதிர்ப்பாற் சொற்களினூடாக மொழித்திறனைத் தமது ஆக்கங்களில் செம்மையாக வெளிப்படுத்துவார்.

# இரண்டாம் தவணை

| இல. | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | பாடவேளை | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 01 | 9.0 | 9.1 | உரைநடை, செய்யுள் | 04 | 37 |
| 02 | 3.0 | 3.2 | செந்தமிழ் போற்றிய சேரன் | 03 | 38 |
| 03 | 12.0 | 12.1 | ஒரு பொருள் பல சொல்<br>பல பொருள் ஒரு சொல் | 02 | 40 |
| 04 | 7.0 | 7.1 | செய்யுள்கள் | 03 | 42 |
| 05 | 4.0 | 4.1 | பென்சிலின் கதை | 03 | 44 |
| 06 | 11.0 | 11.1 | கதை எழுதுதல் | 04 | 46 |
| 07 | 12.0 | 12.2 | மரபுத் தொடர்கள் | 03 | 48 |
| 08 | 2.0 | 2.1 | உயிர்காக்கப் பயிர்காப்போம் | 04 | 50 |
| 09 | 6.0 | 6.1 | ஈசன் உவக்கும் இன்மலர் | 03 | 52 |
| 10 | 12.0 | 12.2 | உவமைத் தொடர்கள் | 04 | 55 |
| 11 | 3.0 | 3.1 | கடலும் கிணறும் | 02 | 57 |
| 12 | 11.0 | 11.2 | விளம்பரம், துண்டுப் பிரசுரம் | 05 | 59 |
| 13 | 12.0 | 12.2 | இரட்டை மொழி, இணைமொழி | 04 | 61 |
| 14 | 7.0 | 7.1 | கருங்காற் குறிஞ்சி | 04 | 63 |
| 15 | 13.0 | 13.3 | வாக்கியங்களை இயைபுற எழுதுதல். | 05 | 65 |

**தேர்ச்சி 9.0 :** வாசித்துக் கிரகித்தவற்றைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 9.1 :** வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம் : உரைநடை, செய்யுள்**

**பாடவேளைகள் :** 04

**கற்றற் பேறுகள்**

- கொடுக்கப்படும் உரைநடை அல்லது, செய்யுள் ஒன்றினைக் கேட்டுக் கிரகித்து முக்கியமானவற்றை எழுதுவார்.
- அப்பகுதியை மாணவர் ஒருவர் வாசிக்க, ஏனையோர் குறிப்பெடுப்பார்.
- செவிமடுத்துக் கிரகித்த விடயங்களைக் குறிப்பாக எழுதிக் காட்சிப்படுத்துவார்.
- பாத்திரங்களின் குணவியல்புகளைச் சுருக்கமாக எழுதி ஆதாரம் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பத்திரிகை அல்லது வேறு புத்தகங்களில் இடம் பெற்ற விடயங்களை மாணவர்களுக்கு காட்சிப்படுத்தல்.
- மாணவர்கள் குறிப்பெடுத்த விடயங்களை மற்றவர்களுடன் கலந்துரையாடச் செய்தல்.
- முக்கியமான விடயங்கள், பாத்திரங்களின் குணாம்சம் பற்றிக் கலந்துரையாடுதல்.
- கொடுத்த தலைப்பில் இடம்பெற வேண்டிய விடயங்களை ஒழுங்காகவும் தெளிவாகவும் நேர்த்தியாகவும் எழுத வழிகாட்டல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

- பத்திரிகையில் வந்த கட்டுரைகள் செய்யுள்கள் போன்றவைகள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்
- செய்யுள் எழுதப்பட்ட டிமைன்தாள்
- பாடநூல்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- முன்வைக்கப்பட்ட கட்டுரை செய்யுள் உள்ளடக்கத்தைப் பந்தியாக எழுதுவார்.
- பிரதான கருத்தையும் துணைக்கருத்துக்களை வேறுபடுத்தி எழுதுவார்.
- பாத்திர இயல்பினை அல்லது குணாம்சங்களை இனங்கண்டு எழுதுவார்.
- கொடுக்கப்பட்ட விடயத்தினை ஒழுங்காகவும் தெளிவாகவும் நேர்த்தியாகவும் எழுதுவார்.

**தேர்ச்சி 3.0** : பல்வேறு பாத்திரங்களை ஏற்று, அவற்றின் இயல்புகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திப் பேசுவார்

**தேர்ச்சி மட்டம் 3.2** : பாவனை செய்து பேசுவார்.

**விடய உள்ளடக்கம் : செந்தமிழ் போற்றிய சேரன்**

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்**

- 'செந்தமிழ் போற்றிய சேரன்' என்னும் கட்டுரையின் உள்ளடக்கத்தை வாசித்து விளங்கிக் கூறுவார்.
- கட்டுரையின் பிரதான கருத்தைக் கூறுவார்.
- துணைக் கருத்துக்களையும் எழுதி வாசிப்பார்.
- கட்டுரையில் காணும் விழுமியக் கருத்துக்களை அறிந்து கூறுவார்.
- தாமும் இவ்வாறான கட்டுரைகளை எழுதுவார்.
- கட்டுரையின் குறித்த பகுதியினை நாடகமாக்கி நடித்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- மாணவர்களைக் கருத்தூன்றி மௌனமாக வாசிக்கச் செய்தல்.
- குழுமுறையில் வாசிக்க வைத்து, தங்கள் கருத்துக்களை முன்வைக்கச் செய்தல்.
- கட்டுரை ஆசிரியரின் நோக்கம் பற்றி விளக்குதல்.
- கட்டுரையில் காணப்படும் விழுமியக் கருத்துக்களைக் கூற, மாணவருக்கு இடமளித்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

- கட்டுரை ஆசிரியர், வித்துவான் திரு. த. கி. குப்புச்சாமி ஆழ்வார் அவர்கள் பற்றிய அறிமுகம்.
- பெருஞ்சேரல் இரும்பொறை மன்னன், பணக்காரரைவிட அறிவுரையாளரை விரும்பும் மன்னன்; புலவர்களை நன்கு ஆதரிப்பவன்.
- பெருஞ்சேரல் இரும்பொறை மன்னனின் அரச சபைக்கு, பாண்டி நாட்டுப் புலவர் 'மோசிகீரனார்' வருகை
- பெருஞ்சேரல் இரும்பொறையார், மோசிகீரனாரின் நட்பு பற்றிய விளக்கம்:
  - முரசு கட்டிலில் மோசிகீரனார் படுத்துறங்கல்
  - பெருஞ்சேரல் இரும்பொறை மன்னனுக்கு ஏற்பட்ட கோபம்
  - புலவர் என்பதை அறிந்து கோபம் தணிதல்

- புலவர் படுத்துறங்க சாமரம் வீசல்; புலவர் திடுகிட்டு எழுதல்
- தான் படுத்துறங்கியது முரசு கட்டில் என்பதை உணர்ந்து, மனம் வருந்துதல்
- மன்னன் புலவரைக் கட்டித் தழுவல்
- மன்னனின் இனிய செயலைப் போற்றல்

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- டிமைன்தாள்
- எழுதுதாள், எழுதுகருவிகள்
- கணினி, மேந்தலை எறியி (OHP)

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- கட்டுரையின் உள்ளடக்கத்தைக் கூறுவார்.
- கட்டுரையின் பிரதான கருத்து, துணைக்கருத்துக்களை எழுதி வாசிப்பார்.
- கட்டுரையில் காணும் விழுமியக் கருத்துக்களை எழுதுவார்.
- இது போன்ற கட்டுரை ஒன்றை எழுதி வாசிப்பார்.
- படத்திலுள்ள பொருத்தமான பகுதியைப் பாவனை செய்து பேசிக்காட்டுவார்.

**தேர்ச்சி 12.0 :** சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.1 :** சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து, செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம் :** ஒரு பொருள் பல சொல்
பல பொருள் ஒரு சொல்

**பாடவேளைகள் :** 02

### கற்றற் பேறுகள்

- ஒரு பொருள் குறித்த பல சொற்களை இனங்காண்பார்.
- பல பொருள் தரும் ஒரு சொல்லை இனங்கண்டு கூறுவார்.
- இனங்கண்ட சொற்களைப் பொருத்தமான இடங்களில் பொருத்தமான முறையில் பிரயோகிப்பார்.
- சொற்களைப் பொருத்தமான வகையில் பிரயோகித்து தமது ஆக்கங்களினை எழுதுவார்.
- சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, ஆக்கங்களில் பயன்படுத்துவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- ஒரு பொருள் பல சொல் அட்டையையும் பலபொருள் ஒரு சொல் அட்டையையும் காட்சிப்படுத்தி கலந்துரையாடல்.
- ஒருவர் ஒரு பொருளைத் தரும் சொல்லைக் கூற, ஏனையோர் அதற்குரிய ஒரு சொல்லைக் கண்டறிந்து கூறவைத்தல்.
- அவ்வாறே, மாணவர் ஒருவர் ஒரு சொல்லைக் கூற, மற்ற மாணவர்கள் அதற்குரிய பல பொருளைக் கூறச் செய்தல்.
- வகுப்பறையில் இவ்வாறு கூறிய சொற்களைப் பயிற்சிக் கொப்பியில் எழுத வைத்தல்.
- தான் முன்பு பாடநூலில் கற்ற பாடங்களிலிருந்து இவ்வாறான சொற்களை இனங்கண்டு எழுதச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

### முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்

- **ஒரு பொருள் பலசொல்**

  ஒரு பொருள் குறித்த பல சொற்கள் வழங்கி வருமாயின், அவை **ஒரு பொருள் பலசொல்** எனப்படும்.

**உதாரணம்:**

| | | |
|---|---|---|
| தமையன் | - | அண்ணன், மூத்தோன், முன்னோன், முன்னவன், |
| தோழி | - | சிநேகிதி, பாங்கி, சகி |
| மிகுதி | - | சால, உறு, தவ, நனி, கூர், கழி |
| அம்பு | - | அத்திரம், கணை, சரம், பாணம், வாளி |

| | | |
|---|---|---|
| ஆசிரியன் | - | ஆசான், உபாத்தியாயன், குரவன், தேசிகன் |
| ஆபரணம் | - | அணி, ஆரம், இழை, கலன், நகை, பணி, பூண் |
| ஆரம்பம் | - | ஆதி, தொடக்கம், முதல் |
| ஆற்றல் | - | உரம், சக்தி, வலிமை |

- **பல பொருளுக்கு ஒரு சொல்**

ஒரு சொல்லானது பல பொருள் குறித்து வழங்கி வருமாயின், அது பல பொருள் குறித்த ஒரு சொல் எனப்படும்.

| | | |
|---|---|---|
| நூல் | - | தையல் நூல், புத்தகம், சாஸ்திரம், பூணூல் |
| மறை | - | வேதம், மந்திரம், கறை, மற, ஒழித்தல் |
| அத்தி | - | ஒரு மரம், கடல், யானை, கொலை, திப்பலி |
| அக்கிரம் | - | குதிரை, கழுதை, அம்பு, நிலையின்மை |
| அணை | - | வரம்பு, செய் கரை, மெத்தை, மட்டு |
| அணங்கு | - | அழகு, தெய்வப் பெண், அச்சம் |
| அணி | - | அலங்காரம், ஒழுங்கு, ஆபரணம், படை, வகுப்பு |
| அகம் | - | இடம், மனை, மனம் |

## தரவிருத்தி உள்ளீடுகள்

- ஒரு சொல் பல பொருள், பல பொருள் ஒரு சொல் அட்டவணை
- எழுதுகருவிகள்
- எழுதுதாள்கள்
- பொருத்தமான கற்றல் - கற்பித்தல் உபகரணங்கள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- சொற்களின் முக்கியத்துவத்தை அறிந்து கூறுவார்.
- சொற்களின் பொருளை இனங்கண்டு கூறுவார்.
- இனங்கண்ட சொற்களைப் பொருத்தமான இடங்களில் பொருத்தமான முறையில் பிரயோகிப்பார்.
- சொற்களைப் பொருத்தமான வகையில் தமது ஆக்கங்களில் எழுதுவார்.
- சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, ஆக்கங்களில் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி 7.0** : இரசணைக்காகவும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : படைப்புக்களை வாசித்து நயப்பார்.

**விடய உள்ளடக்கம் : சிலேடை**

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்**

- செய்யுள்களைக் கருத்தூன்றி மௌனமாக வாசிப்பார்.
- செய்யுளில் குறிப்பிடப்படும் பிரதான கருத்தை முன்வைப்பார்.
- மாணவர்கள் குழுக்களாக இயங்கி, தாம் நயந்தவற்றை எழுதி வாசிப்பார்.
- இவை போன்ற கவிதையைத் தாமும் எழுதிக் காட்சிப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- மாணவர்களை மௌனமாக வாசிக்கச் செய்தல்.
- மாணவர்கள் வாசித்துக் கிரகித்ததை முன்வைக்கச் செய்தல்.
- பாடலாசிரியரது நோக்கம் பற்றி விளக்குதல்.
- பாடலில் சிலேடை அணி இடம்பெற்று நயம் பயப்பதைப் பற்றி விளக்கிக் கூறுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

- சிலேடை சொல்லணிகளில் ஒன்று.
- ஒரு சொல் அல்லது தொடர் பல பொருள் தரும்படி அமைவது சிலேடை எனப்படும்.
- செவிக்கு இனிமையானதும், நினைவில் வைத்திருக்கவும் உதவுவது.
- மேடைப் பேச்சிலும், உரைநடை வகையிலும் சிலேடை கையாளுதல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- சிலேடை அணிகள் இடம்பெறும் தொடர்கள் எழுதிய டிமைன்தாள்.
- எழுது கருவிகள்
- எழுது தாள்கள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடலைச் செம்மையாக வாசிப்பார்.
- பாடலை ஓசைநயத்துடன், தனியாகவும் குழுவாகவும் பாடுவார்.
- பாடலை உறுப்பமைய எழுதுவார்.
- பாடலை வாசித்துக் கிரகித்து, வினாக்களுக்கு விடை எழுதுவார்.

# பின்ணிணைப்பு

**சிலேடை**

**காளமேகப் புலவரின் பாடலொன்று தரப்படுகின்றது.**

வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன
இங்கார் சுமர்ந்திருப்பார் இச்சரக்கை
மங்காத, சீரகத்தை தந்தீரேல் வேண்டேன் பெருங்காயம்
வேரகத்துச் செட்டியாரே!

இந்தப் பாடலை நேரடியாகப் பொருள் கொண்டால் ஒரு பல சரக்குக் கடைக்காரன் வேரகம் எனப்படும் திருவேரகத்தைச் சேர்ந்த செட்டியாரைப் பார்த்துச் சொல்வது போல் இருக்கின்றது.

**வேரகச் செட்டியாரே!**

சமிபாடின்மையைப் போக்க வெங்காயம், வெந்தயம், பெருங்காயம் முதலியவைகளை இட்டுக் குழம்பு தயாரிப்பார்கள். இதில் வாங்கி வந்த வெங்காயமானது சுக்கைப் போன்று உலர்ந்து போய் விடுமாயின், வெந்தயம் இருந்தும் எந்தப் பயனுமில்லை. எனவே அந்தச் சரக்குப் பொருட்கள் இருப்பதில் எந்தப் பயனும் இல்லை. இவைகளில் கிடைக்கப்பெறும் பயனை சீரகத்தில் செய்யப்படும் இரசம் மூலம் பெறலாம். மேலும் சீரகமும் கெட்டுப் போகாத பொருளாகவே இருக்கின்றது. எனவே சீரகத்தை எனக்குத் தந்தால் பெருங்காயம் எனக்குத் தேவையில்லை.

வேரகத்துச் செட்டியாரே என்பது, திருவேரகத்தில் வீற்றிருக்கும் பெருமானே! வெங்காயம் என்பதில் காயமென்பது உடம்பு, எனவே, வெங்காயம் என்பது வெறுமையான உடம்பு. சுக்கானால், அதாவது சுக்கைப்போல வாடி வதங்கிப் போனால் வெந்தயத்தால் ஆவதென்ன? வெந்த + அயம் என்பது உயிர் தரிப்பதற்காக உண்ணப்படும் அயச் செந்தூரம் என்ற பொருளில் வரலாம் எனக் கூறப்படுகின்றது. எனவே, உடம்பு கெட்டுப்போனால் உயிரைத் தக்கவைத்துக் கொள்ளும் அந்த அயற் செந்தூரத்தால் என்ன பயன்? இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை, அதாவது, அதன் பிறகு யார் இந்த உடலைச் சுமந்து கொண்டிருக்க விரும்புவார்கள். சீரகத்தைத் தந்தீரே என்பதில் சீர் + அகம் அதாவது, சிறந்த மனதை அல்லது, சிறந்த வீட்டை அல்லது, வீடுபேற்றைத் தருவீரேயானால், வேண்டேன் பெருங்காயம். பெருங்காயம் என்பது பெரிய + காயம். அதாவது பெரிய உடம்பு. எனவே, மீண்டும் மீண்டும் பிறந்து வினையினால் அவதிப்படும் இந்தப் பெரிய உடம்பைக் கேட்கமாட்டேன். என்ற இன்னொரு பொருளையும் கொண்டு சிலேடையாக இப்பாடல் அமைகின்றது.

**தேர்ச்சி 4.0 :** தமது எண்ணங்களைக் கேட்போர் உளங்கொள்ளத்தக்க வகையில் எடுத்துரைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 4.1 :** ஆக்கத்திறன் வெளிப்படும் விதத்தில் தெளிவாகப் பேசுவார்.

**விடய உள்ளடக்கம் : பென்சிலின் கதை**

**பாடவேளைகள் :** 03

### கற்றற் பேறுகள்

- கட்டுரையை வாசித்துக் கிரகித்துக் கூறுவார்.
- பென்சில் செய்யும் விதம் பற்றி விபரித்துக் கட்டங்கட்டமாகக் கூறுவார்.
- பென்சில் செய்யத் தேவையான மூலப்பொருள்கள் பற்றிப் பட்டியற்படுத்தி விபரித்துக் கூறுவார்.
- சுயசரிதையாக ஆசிரியர் ஆரம்பத்தைக் கூற, மாணவர்கள் அதனைத் தொடர்ந்து கூறி முடிப்பார்.
- குழுக்களாக மாணவர்களைச் செயற்பட வைத்து ஆக்கத்திறன் வெளிப்படும் விதத்தில் பாட உள்ளடக்கத்தைக் கூறுவார் / எழுதுவார்.
- வாசித்த விடயம் தொடர்பான சம்பவ விபரிப்பை வெளிப்படுத்திக் கூறுவார்.
- பாடப்பரப்பில் இடம் பெற்ற முக்கிய தரவுகளை ஒன்றித்து பேசிக்காட்டுவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- கட்டுரையை மாணவர்கள் ஒவ்வொருவரும் மௌனமாக வாசித்துக் கிரகிக்க வழிகாட்டுதல்.
- குழுக்களாக மாணவர்களைச் செயற்படச்செய்து, கட்டுரையில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடச் செய்தல்.
- ஒருவருடன் ஒருவர் உரையாடி, தாம் கிரகித்த விடயங்களைத் தொகுத்து எழுதச்செய்தல்.
- ஒவ்வொரு குழுவினரும் தாம் தொகுத்து எழுதியதை முன்வைக்க வழிகாட்டுதல்.
- பென்சில் செய்யத் தேவையான மூலப் பொருட்கள் ஒவ்வொன்றினைப் பற்றியும் தேவையான மேலதிக விளக்கமளித்தல்.
- பல்வேறுபட்ட வினாக்களை ஒவ்வொரு குழுவினருக்கும் வழங்கி, விடை எழுதச்செய்து கலந்துரையாட வழிகாட்டுதல்.
- மாணவர்களிடம் எழுமாறாகச் சிறிய வினாக்கள் கேட்டு, அவற்றுக்கு விடை கூறச் செய்தல்
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

## முதன்மைப் பதங்கள் (Key Words) , எண்ணக்கருக்கள்

- கட்டுரை ஆசிரியர் நோக்குப் பற்றிய விபரம்.
- பைன் மரம்
- கரியம்
- நிலக்கரி
- களிமண்
- H, B எனும் எழுத்துக்கள் பென்சிலில் எழுதப்படுவதற்கான காரணம்.
- பசை
- அலுமினியம்
- தொழிற்சாலை உலை

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- டிமைன்தாள்கள்
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- கட்டுரை தொடர்பான கருத்துக்களைப் பட்டியற்படுத்தி எழுதுவார்.
- பிரதான சொற்கள் அவை பற்றிய கையாள்கை பற்றி உதாரணம் காட்டுவார்.
- பென்சில் ஒன்று உருப்பெறும் முறையை சுயசரிதையாகக் கூறுவார் / எழுதுவார்.

**தேர்ச்சி 11.0 :** படைப்புக்களை வாசித்த அனுபவங்கள் ஊடாக, படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 11.1 :** பல்வேறு ஆக்கங்களை எழுதுவார்.

**விடய உள்ளடக்கம் :** **கதை எழுதுதல்**

**பாடவேளைகள் :** 04

## கற்றற் பேறுகள்

- கதை ஒன்றினை எழுதுவது பற்றிய அடிப்படை விதிகளைக் விளக்குவார்.
- கதையொன்று சிறந்த அறிவூட்டலை வழங்குவதாக அமையவேண்டும் என்பதனை உதாரணம் மூலம் விளக்குவார்.
- தலைப்பின் பொருத்தப்பாடு பற்றி விளக்கம் கூறுவார்.
- தனது மனத்தினை வெகுவாகப் பாதித்த விடயம் ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு கதை எழுதுவார்.
- எதிர்பார்ப்புடன் கூடிய கதையொன்றின் ஆரம்பத்தை எழுதுவார்.
- தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் நேர்த்தியாகவும் கதையை எழுதி முடிப்பார்.
- பொருத்தமான மொழிநடையைக் கையாண்டு, மற்றவர்களுக்கு இலகுவிற் புரியும் வண்ணம் எழுதுவார்.
- அவதானிப்புகள், சிந்தனைகள் புலப்படும் வண்ணம் கதையை எழுதுவார்.
- தாம் எழுதும் ஆக்கங்களின் வடிவம், அமைப்பு, தலைப்பு என்பன பொருத்தமுற அமையும் வண்ணம் கதையை எழுதுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- கதை ஒன்றினை வாசித்துக்காட்டிப் பாடத்தை ஆரம்பித்தல்.
- கதை ஒன்றினை அல்லது, உரையாடல் ஒன்றினை எழுதும் முறையினை மாணவருடன் கலந்துரையாடிக் கரும்பலகையில் எழுதுதல்.
- தனது அனுபவங்களை எவ்விதம் கையாண்டு கதை எழுதுதல் வேண்டும் எனக் கலந்துரையாடல்.
- கதையின் ஆரம்பம் எதிர்பார்ப்பினைக் கொடுப்பதாக அமைய வேண்டியதை வலியுறுத்தல்.
- கதையின் தலைப்பு எதிர்பார்ப்பினை ஏற்படுத்துவதாக கதைக்கருவை உள்ளடக்கமாகக் கொள்வதாக அமைய வேண்டியதை எடுத்து விளக்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

### முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்

- கதைக்கருவை வளர்த்துச் செல்லல்.
- கதைக்கருவை வளர்த்துச் செல்வதற்கு பாத்திரங்கள் உதவுவதை உதாரணத்துடன் விளக்குதல்.
- கதையோட்டத்தை வளர்க்க தலைப்பு எவ்விதம் உதவுகிறது என்பதை விளக்குதல்.
- பாத்திர அறிமுகம், மொழிநடை மூலம் கதை வெற்றிபெறுவதைக் கலந்துரையாடி விளக்குதல்.

### தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- கதைகள்
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்

### கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- தலைப்பின் பொருத்தப்பாட்டினை எழுதுவார்.
- கொடுக்கப்பட்ட கருத்துக்களை உள்ளடக்கியதாகக் கதை ஒன்றினை எழுதுவார்.
- கதைக்கருவைப் புலப்படுத்தும் வகையில் தலைப்பினை எழுதுவார்.
- பொருத்தமான மொழிநடையில் மற்றவர் இலகுவில் விளங்கிக் கொள்ளும் வகையில் எழுதுவார்.
- பாத்திரங்களின் குணவியல்பு பற்றி விபரித்து எழுதுவார்.

**தேர்ச்சி 12.0 :** சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.2 :** சொற்றொடர்களின் பொருளையும் வகையையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம் :** மரபுத்தொடர்கள்

**பாடவேளைகள் :** 03

**கற்றற் பேறுகள்**

- மரபுத்தொடர் என்றால் என்ன? என்பதற்கு விளக்கம் தருவார்.
- மரபுத்தொடர் குறிக்கும் குறிப்புப் பொருளை அறிந்து கூறுவார்.
- பாடநூலிலிருந்து தேர்ந்தெடுக்கும் ஒரு பாடத்தில் காணப்படும் மரபுத்தொடரை இனங்கண்டு கூறுவார்.
- மரபுத் தொடர்களைக் கையாண்டு வாக்கியம் எழுதுவார்.
- மரபுச் சொற்றொடர்களைக் கையாள்வதன் மூலம் தமது மொழியாற்றலை வளம்படுத்தலாம் என்று கருதி, தமது ஆக்கங்களில் அவற்றைக் கையாளுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- மரபுத்தொடர்கள் இடம்பெறும் பந்தி ஒன்றினை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துதல்.
- காட்சிப்படுத்திய பந்தியில் இடம்பெறும் மரபுச்சொற்றொடர்களையும் அவை குறிக்கும் குறிப்புப் பொருளையும் பற்றியும் மாணவர்களுடன் கலந்துரையாடல்.
- மரபுத்தொடர்களைக் கையாண்டு வசனம் அமைத்தல்.
- தாம் கூறவந்த கருத்தை அழுத்தமாகவும், சுருக்கமாகவும், சுவையாகவும் கூறுவதற்கு மரபுச் சொற்றொடர்கள் உதவுவதை அறிந்து விளக்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

- **மரபுத்தொடர்**

  சொற்கள் தமக்குரிய நேர்ப்பொருளை உணர்த்தாமல், குறிப்பான வேறு ஒரு பொருளை உணர்த்தி வருவது.
- மரபுத்தொடர், இலக்கணத் தொடர் என்றும் அழைக்கப்படும்.

- **மரபுத் தொடர்கள் சில**

| | | |
|---|---|---|
| அடிகோலுதல் | - | அத்திவாரமிடல், ஆயத்தஞ் செய்தல் |
| அடியுறை | - | பாதகாணிக்கை |
| கண் கனலுதல் | - | கோபத்தால் கண்சிவத்தல் |
| கண் சாத்துதல் | - | அன்போடு பார்த்தல் |
| கண்டு காணுதல் | - | எகவனமாய்ப் பார்த்தல் |
| கண் திறத்தல். | - | அறிவு உண்டாதல், அருள் உண்டாதல் |
| கண் மூடுதல் | - | சாதல் |
| கரைத்துக் குடித்தல் | - | முற்றக் கற்றறிதல் |
| கழுத்தறுத்தல் | - | பெருந் துன்பத்துக்குள்ளாக்குதல், தீமைசெய்தல் |
| காதைக் கடித்தல் | - | கோள் சொல்லுதல் |
| காலாறுதல் | - | ஓய்திருத்தல் |
| காலூன்றுதல் | - | நிலைபெறுதல் |
| காது குத்துதல் | - | வஞ்சித்தல் |
| கைவருதல் | - | தேர்ச்சி பெறுதல் |
| செவி மடுத்தல் | - | ஆர்வத்தோடு கேட்டல் |
| தலை காட்டுதல் | - | பலருமறிய வெளிவருதல் |
| தோள் கொடுத்தல் | - | இடரில் உதவி செய்தல் |
| நாக்கு நீளுதல் | - | அடக்கமின்றிப் பேசுதல் |
| பல்லைப் பிடுங்குதல் | - | சக்தியை வாங்குதல் |
| முகத்திலடித்தல் | - | நேரே நிந்தித்தல் |

## தரவிருத்தி உள்ளீடுகள்

- மரபுத்தொடர் இடம்பெறும் பந்தி
- டிமைன்தாள்கள்
- எழுதுகருவிகள்
- எழுதுதாள்கள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- மரபுத்தொடர்களுக்கு குறிப்புப் பொருள் கூறுவார்.
- மரபுத்தொடரைக் கையாண்டு வாக்கியங்களை எழுதுவார்.
- மரபுத்தொடர்களை இனம் கண்டு கூறுவார்.
- மரபுத்தொடர்களைத் தமது ஆக்கங்களில் கையாள்வார்.

**தேர்ச்சி 2.0 :** சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவகையில் உரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.1 :** தமது உணர்வுகளும் எண்ணங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் உரையாடுவார்.

**விடய உள்ளடக்கம் : உயிர் காக்கப் பயிர் காப்போம்**

**பாடவேளைகள் :** 04

**கற்றற் பேறுகள்**

- நிறுத்தக் குறிகளை அனுசரித்து வாசித்துக் கிரகித்துக் கூறுவார்.
- கட்டுரைப் பகுதியின் முக்கிய நோக்கத்தைத் தெளிவுபடுத்திக் கூறுவார்.
- சோடி சேர்ந்து அல்லது, குழுவாக இயங்கிக் கட்டுரைப்பகுதியின் கரு, துணைக்கருக்கள் பற்றிக் கலந்துரையாடி அவற்றைப் பட்டியற்படுத்துவார்.
- விழுமியக் கருத்துக்கள் தரும் வேறு குறள்களை ஆதாரங்காட்டி உரையாடுவார்.
- சோம்பலை உதறித்தள்ளி முயற்சியுடன் செயற்படுவோம் என்பதற்குத் தமது அனுபவத்தைக் கலந்துரையாடலூடாக முன்வைப்பார்.
- விழுமியக் கருத்துக்களை மனங்கொண்டு அவற்றைக் கடைப்பிடிக்கவேண்டுமெனக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- திருக்குறள் பற்றியும் அதில் இடம்பெறும் விழுமியக் கருத்துக்கள் பற்றியும் மாணவர்களுடன் கலந்துரையாடிப் பாடத்தை ஆரம்பித்தல்.
- மக்கள் ஆதிகாலத்தில் முயற்சி செய்து வாழ்ந்ததையும் இன்றைய மக்களது வாழ்வு முறையினையும் ஒப்பிட்டுக் கருத்துக்களை முன்வைத்தல்.
- பாடப்பரப்பை மௌனமாக வாசிப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்தல்.
- முழுமையான உள்ளடக்க விடயங்கள் வெளிப்படும் விதமாக வினாக்களைக் கேட்டலும் கலந்துரையாடி அவர்களது கருத்துக்களைப் பெறுதலும்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து அவர்கள் கிரகித்தவற்றை எழுதச் செய்து, விபரிக்கச் செய்தல்.
- கட்டுரையில் இடம்பெறும் விழுமிய உணர்வுகளுக்கு ஏற்ப, தாமும் முயற்சி உடையவராக வாழவேண்டுமென உணர்ந்து கூற வழிப்படுத்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

### முதன்மைப் பதங்கள் (Key Words) , எண்ணக்கருக்கள்

- ஆதிகால மக்களினம் தமது உணவுத் தேவையைத் தாமே நிறைவேற்றியமையை எடுத்துக்காட்டி, இக்கால மக்களின் வாழ்வுடன் ஒப்பிடல்.
- சொல்லாட்சிகளை எடுத்துக்காட்டல்.
  - பச்சைக் காய்கறிகள்
  - இங்கொரு வீட்டிலும் அங்கொரு வீட்டிலுமா?
  - வறுமையிற் கொடுமை
  - வகைவகையான கொடிகள்
  - இரண்டொரு திங்கள்
  - பருவத்துக்கேற்ற பயிர்
  - உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

### தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- திருக்குறள்
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்

### கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- பல்வேறுபட்ட சொல்லாட்சிகளை கையாள்வார்.
- குறியீடுகளை உரிய முறையில் கையாண்டு வாக்கியம் எழுதுவார்.
- சொற்களஞ்சிய விருத்தியுடன் பேச்சு ஒன்றை முன்வைப்பார்.
- விழுமியக் கருத்துக்களைப் பட்டியற்படுத்துவார்.

**தேர்ச்சி 6.0 :** கிரகித்துப் பொருள் உணர்ந்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 6.1 :** மௌனமாக வாசித்துக் கிரகித்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம் : ஈசன் உவக்கும் இன்மலர்**

**பாடவேளைகள் :** 03

**கற்றற் பேறுகள்**

- 'ஈசன் உவக்கும் இன்மலர்' என்னும் பாடற் பகுதியைப் பதம் பிரித்தும் கொண்டுகூட்டியும் வாசிப்பார்.
- பாடல்களில் வரும் அரும்பதங்களுக்குப் பொருள் கூறுவார்.
- பாடலை இசையுடன் ஓதுவார்.
- பாடல் தரும் பொருளைத் தமது மொழிநடையில் எழுதி வாசிப்பார்.
- பாடலில் தாம் நயந்த பகுதியைக் கூறி, அவ்விதம் நயந்ததற்கான காரணத்தையும் விளக்கிக் கூறுவார்.
- பாடலில் இடம்பெறும் அணிகளைச் சுட்டிக்காட்டி விளக்குவார்.
- உள்ளக்கமலம், கூப்பிய கைக்காந்தள், நாட்டவிழி நெய்தல் என்பன இறைவனால் விரும்பப்படும் என எடுத்துக் கூறுவார்.
- சுவாமி விபுலாநந்தர் பற்றிய மேலதிக விடயங்களைத் தேடித் தொகுத்து எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பாடலை இசையோடு பாடிக்காட்டி, மாணவரைக் கேட்கச் செய்தல்.
- மாணவர் ஒவ்வொருவரும் தனித்தனியே பாடலை வாசிக்க வழிகாட்டுதல்.
- மாணவரைக் குழுக்களாக்கி, ஒவ்வொரு பாடலையும் பாடிப் பயிற்சிபெற வழிகாட்டுதல்.
- அரும்பதங்களுக்குப் பொருள் எழுதச் செய்தல்.
- அணிகளைக் கண்டறியச் செய்து, விளக்கிக் கூறச்செய்தல்.
- மாணவர் நயந்த பகுதியைக் கூறி, அதற்கான காரணத்தையும் விளக்குமாறு வழிப்படுத்தல்.
- இவ்வாறான பொருள் கொண்ட கவிதையொன்றை எழுத (4 வரிகளில்) வழிப்படுத்தல்.
- பாடலில் வரும் கருவினை எழுதச் செய்தல்.
- மாணவர் பாடலை இரசனையோடு பாடுதல்.
- கவிஞரது கற்பனைத் திறத்தை விளக்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

## முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்

- அரும்பதங்களுக்கான பொருளை அகராதியின் துணையோடு கண்டறிதல்.

வள்ளல் - வரையாது கொடுப்போன்

கமலம் - தாமரை

உத்தமனார் - கடவுள், நற்குணமுடையவன், உயர்ந்த குறிகளுடையவன்

காப்பு - தெய்வ வணக்கம், பாதுகாவல்

மாமலர் - சரக்கொன்றை (சரஞ் சரமாகப் பூக்கும் கொன்றை மரம்)

கழுநீர் - செங்குவளை, நீலோற்பலம், தீர்த்தநீர்

காந்தள் - கார்த்திகைப் பூ

பார் - பூமி, உலகம்

கற்பகம் - வேண்டியதையெல்லாம் தரும் மரம் (இம் மரம் தேவலோகத்தில் உள்ளது)

நாட்டம் - நோக்கம், கண்பார்வை

- **உருவக அணி**

| | | |
|---|---|---|
| உள்ளக் கமலம் | - | உள்ளமாகிய கமலம் (தாமரை) |
| கூப்பிய கைக்காந்தள் | - | வணக்கம் செய்யும் கைகள் |
| நாட்ட விழி (நாடிய விழி) | - | விரும்பிப் பார்க்கும் பக்தியான பார்வை |

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடல் எழுதப்பட்ட டிமைன்தாள்
- பாடல் உள்ளடங்கிய ஒலிப்பேழை
- எழுதுகருவிகள்
- காகிதாதிகள்
- பின்னிணைப்பு - 1

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- கீழ்வரும் பாடலின் மையக் கருத்தைக் கூறுவார்.

**"பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்பகமோ**
**வாட்டமுறாதவர்க்கு வாய்த்த மலர் எதுவோ?**
**பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப் பூவும் அல்ல**
**நாட்டவிழி நெய்தல் அடி நாயகனார் வேண்டுவது"**

- கவிஞர், கடவுள்மீது கொண்ட பக்தியை விளக்கிக் கூறுவார்.
- பாடலில் இடம்பெறும் உருவக அணியை விளக்கி எழுதுவார்.
- இப்பாடல்களைப் படித்து முடித்ததும் தாம் பெற்ற உணர்வினை விளக்கிக் கூறுவார்.
- பாடலை இசையோடு பாடுவார்.
- அப்பாடலில் தாம் நயந்தவற்றை விளக்குவார்.

## பின்னிணைப்பு - 1

## சுவாமி விபுலாநந்தர்



கிழக்கிலங்கையின் விடிவெள்ளியாகத் தோன்றியவர் சுவாமி விபுலாநந்தர். மீன்பாடும் தேன் நாடெனப் போற்றப்படும் மட்டக்களப்புக்குத் தென்கிழக்காக சுமார் 28 மைலுக்கப்பாலுள்ள காரைதீவில் இவர் 27.03.1892 இல் பிறந்தார். தந்தையார் சாமித்தம்பி, தாயார் கண்ணம்மையார். பெற்றோர் இவருக்கு வைத்த பெயர் மயில்வாகனன் என்பதாகும். இவர் துறவு பூண்டதன் பின் (1923) 'விபுலாநந்த அடிகள்' என அழைக்கப்பட்டார்.

தமிழகத்திலும் ஈழத்திலும் தலைசிறந்த முத்தமிழ் வித்தகராய்த் திகழ்ந்து, தவவாழ்வு மேற்கொண்டு தமிழ் மொழிக்குத் தொண்டாற்றியவர் விபுலாநந்த அடிகள். இவர் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் தமது ஆற்றலை வெளிப்படுத்தியவர். இவர் எழுதிய நூல்களுள் 'யாழ்நூல்' இவருக்குப் பெரும் புகழைச் சேர்த்தது.

இலங்கையிலும் தமிழ்நாட்டிலுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் முதல் தமிழ்ப் பேராசிரியராகப் பணி புரிந்த சுவாமி விபுலாநந்தர் இலக்கியம், சமயம், தத்துவஞானம், அறிவியல், இசை முதலான பல துறைகளிலும் கற்றுத் தேர்ந்தவர். பன்மொழிப் புலமையும் உடையவர்.

இவர், நவீன உலகிற்கு ஏற்ற வகையிலும் பல பாடல்களைத் தந்தவர் என்பதற்கு, 'ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று' என்ற பாடல் சிறந்த எடுத்துக்காட்டாகும். பல சாதனை படைத்த சுவாமி விபுலானந்தர் 19.07.1947 இல் இறைவனடி சேர்ந்தார்.

**தேர்ச்சி 12.0 :** சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.2 :** சொற்றொடர்களின் பொருளையும் வகையையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம் :** **உவமைத் தொடர்கள்**

**பாடவேளைகள் : 04**

## கற்றற் பேறுகள்

- உவமைத் தொடர்களை இனங்கண்டு கூறுவார்.
- உவமைத் தொடர்கள் தரும் பொருட்சிறப்பை விளங்கிக் கூறுவார்.
- பாடலுக்கும் உரைக்கும் சிறப்புப் பொருள் தருவதாக உவமைத் தொடர்கள் அமைவதை எடுத்து விளக்குவார்.
- உவமைத் தொடர்களைக் கையாண்டு வாக்கியம் எழுதுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- உவமைத் தொடர்கள் இடம்பெறும் பந்தி ஒன்றினை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடல்.
- உவமைத் தொடர்களை இனங்காட்டச் செய்து, அவை தரும் பொருட்சிறப்புப் பற்றிக் கலந்துரையாடி விளக்குதல்.
- உவமைத் தொடர்களைக் கையாண்டு வாக்கியங்கள் எழுத வழிகாட்டல்.
- தாம் நயந்ததைக் கூறச் செய்து, அதில் உவமைச் சொற்றொடர் தரும் சிறப்புப் பொருள் பற்றியும் விளக்கிக் கூறுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

## முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்

- உவமைத் தொடர்கள் யாவும், உரையிலும் செய்யுளிலும் கருத்துத் தெளிவுபடுத்தப் பெரிதும் உதவும்.
- தெரிந்த ஒரு பொருளின் இயல்பை நினைவுறுத்தி, தெரியாத ஒரு பொருளின் இயல்பை விளக்குவது உவமைச் சொற்றொடர்கள்.

### தரவிருத்தி உள்ளீடுகள்

- உவமைத் தொடர்கள் இடம்பெறும் பந்தி
- உவமைத் தொடர்கள் இடம்பெறும் அட்டவணை
- டிமைன் தாள்கள்
- எழுது கருவிகள்

### கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- கொடுத்த பகுதியில் உவமைத் தொடர்களை இனங்கண்டு கூறுவார்.
- உவமைத் தொடர்கள் இடம்பெறும் பகுதியில் அவை தரும் கருத்துச் சிறப்பை விளக்குவார்.
- உவமைத் தொடர்களைக் கையாண்டு வாக்கியம் எழுதுவார்.

## பின்னிணைப்பு

உவமானமாக மட்டும் அமைந்துள்ள தொடர்கள் உவமைத் தொடர்களாகும்.

1. உயிரும் உடலும் போல - பிரியாத நட்பு
2. எடுப்பார் கைப்பிள்ளை போல - சுயநிலையற்ற தன்மை
3. ஒரு தாய் வயிற்றுப் பிள்ளை போல - ஒற்றுமை
4. ஓருயிரும் ஈருடலும் போல - இருவரின் ஒருமைத் தன்மை
5. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல - ஏமாற்றம்
6. கீரியும் பாம்பும் போல - தீராப் பகை
7. சிலையில் எழுத்துப் போல - அழியாமை
8. சுழற் காற்றில் அகப்பட்ட துரும்பு போல - துன்பப் போராட்டம்
9. செவிடன் காதில் சங்கு ஊதியது போல - பயனின்மை
10. தாரகை நடுவே தண்மதி போல - தலைமைச் சிறப்பு

**பொருள் கண்டறிக**

1 பாழடைந்த பழங்குட்டிச் சுவர் போல

2 பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்காய் முடிந்த கதை போல

3 புற்றிலே ஈசல் புறப்பட்டது போல

4 மலையும் மலையும் மோதினாற் போல

5 முயலை விட்டுக் காக்கை பின் போனது போல

6 விளக்கிலே மொய்த்த விட்டில் போல

7 வீட்டைக் கட்டிக் குரங்கைக் குடிவைத்தது போல

8 வெங்கலக் கடையில் மத யானை புகுந்தாற் போல

**தேர்ச்சி 3.0 :** பல்வேறு பாத்திரங்களை ஏற்று, அவற்றின் இயல்புகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திப் பேசுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பாத்திரங்களின் இயல்புகளுக்கேற்ப நடித்துப் பேசுவார்.

**விடய உள்ளடக்கம் : கடலும் கிணறும்**

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள்**

- குழுச் செயற்பாட்டில் சிறுகதையில் இடம்பெறும் பாத்திரங்களை இனங்காண்பார்.
- பாத்திரம் ஒவ்வொன்றினதும் உரையாடல் பகுதிகளை சிறுகதைலிருந்து தேர்ந்தெடுத்து எழுதுவார்.
- காட்சிகளாகப் பிரித்து நாடகப் பிரதியொன்றை இச் சிறுகதையிலிருந்து புதிதாக ஆக்குவார்.
- பாத்திரத்தின் பண்பு, உணர்ச்சி நிலைக்கு ஏற்ப நடித்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- சம்பவங்கள் படைப்பாக்கமாக வெளிப்படும் வகை குறித்துக் கலந்துரையாடுவார்.
- மக்கள் மத்தியில் வழக்கிலுள்ள, வழக்கிலிருந்த நாட்டார் பாடல்கள் பற்றிக் கலந்துரையாடுவார்.(பண்டாரவன்னியன், கட்டப்பொம்மன், மதுரைவீரன் போன்றோரது கதைப்பாடல்கள் மற்றும் கிராமியச் சம்பவங்கள் நாட்டார் பாடல்களாகியமை)
- சிறுகதை, நாடகம் வடிவங்கள் குறித்து விளக்கங்களை முன்வைத்தல்.
- குழுச் செயற்பாட்டில் சிறுகதையை நாடகமாக்கிய பிரதிகளை ஒப்பாய்ந்து ஒவ்வொன்றிலுமான சிறப்பம்சங்கள், குறைபாடுகள் பற்றிய விமர்சனக் கலந்துரையாடலை ஒழுங்கமைத்தல்.
- பாத்திரங்களாக மாறி உணர்வு வெளிப்பாட்டை குரல்வளம், உடல்மொழி என்பவற்றின் வாயிலாக வெளிக்கொணர ஏற்ற திட்டமிடலை மேற்கொள்ளுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

- தாம்பூலம்
- உபகாரி
- கலைமகள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- நாட்டார்பாடல்கள், சிறுகதை, நாடகம் போன்ற கலை இலக்கிய வடிவங்கள் பற்றி தெளிவுபடுத்துவார்.
- செல்வத்தை சுயநலத் தேவைக்குப் பயன்படுத்துவோர் குறித்தும் பொதுநல நோக்கில் செலவிடுபவர் குறித்தும் ஔவையாரின் கருத்தை வெளிப்படுத்துவார்.
- அறம் பற்றிக் கலந்துரையாடித் தெளிவுபடுத்துவார்.

**தேர்ச்சி 11.0 :** படைப்புக்களை வாசித்த அனுபவங்கள் ஊடாக, படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 11.2 :** நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவார்.

**விடய உள்ளடக்கம் :** **விளம்பரம், துண்டுப்பிரசுரம்**

**பாடவேளைகள் :** 05

**கற்றற் பேறுகள்**

- விளம்பரம் ஒன்றை ஆக்கும்போது, அவதானிக்க வேண்டிய விடயங்களைக் கலந்துரையாடி எழுதுவார்.
- விளம்பரத்திற்கான பொருளினது தரம், தகுதி, விலை என்னும் தரவுகளைச் சேகரித்துத் தொகுப்பார்.
- அவற்றை அடிப்படையாகக் கொண்டு விளம்பரத்தை வெளியிடுபவரது பெயர், திகதி என்பனவும் உள்ளடங்க வேண்டுமென வலியுறுத்திக் கூறி அதனையும் இணைத்து எழுதுவார்.
- விளம்பரம் எழுதுபவரது நோக்கம் பெரும்பாலும் புதிய பொருள் ஒன்றினது அறிமுகம், அதன் பாவனைச் சிறப்பு என்பனவற்றை பிரசாரம் செய்வதாக அமைவதை அடியொற்றி எழுதுவார்.
- கவர்ச்சிகரமான தலைப்பு, கவர்ச்சிகரமான மொழிநடை, சுருங்கச் சொல்லி புரிய வைக்கும் விதம் என்ற பண்புகளுடன் விளம்பரத்தை எழுதுவார்.
- முக்கியமான செய்தி ஒன்றை, பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரமாக வெளியிடுவதை மனதிலே கொண்டு துண்டுப்பிரசுரம் ஒன்றை எழுதுவார்.
- பொருத்தமான தலைப்பு, விளிப்பு முதலானவற்றை உள்ளடக்கித் துண்டுப்பிரசுரம் ஒன்றை எழுதுவார்.
- துண்டுப்பிரசுரத்தை வெளியிடுபவரது பெயர், பதவி, முகவரி, திகதி என்பன அமைய எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பல்வேறு விதமான விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள் என்பனவற்றை முன்கூட்டியே தொகுக்கச் செய்து, அவ்விதம் கொண்டு வந்தனவற்றைக் காட்சிப்படுத்திப் பாட அறிமுகம் செய்தல்.
- விளம்பரம், துண்டுப்பிரசுரம் என்பனவற்றைப் பொருத்தமான சாதனங்கள் மூலம் விளக்குதல்.

- சிறந்த சொல்லாட்சி அமையும் வண்ணம் தமது மொழிநடையில் எழுதுதல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து விளம்பரம், துண்டுப்பிரசுரம் எழுதுவித்து, காட்சிப்படுத்தி மேலதிக விளக்கத்தை மாணவருடன் கலந்துரையாடல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

## முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்

- விளம்பரத்தின் நோக்கம், அமைப்பு
- துண்டுப்பிரசுரத்தின் நோக்கம், அமைப்பு
- மொழிநடை - வாசகரைக் கவரும் நடை
- கவர்ச்சிகரமாக அமைதல்
- சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதாக அமைதல்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பல்வேறு விதமான விளம்பரங்கள்
- பல்வேறு செய்திகளை வெளிப்படுத்தும் துண்டுப்பிரசுரங்களைக் காட்சிப்படுத்தல்
- எழுதுகருவிகள்
- எழுதுதாள்கள்
- மாதிரி விளம்பரம்
- துண்டுப்பிரசுரம்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- விளம்பரம், துண்டுப்பிரசுரம் ஆகியவற்றின் நோக்கத்தையும் அமைப்பையும் எழுதுவார்.
- விற்பனை உத்தியைக் கொண்டு, பிரசாரம் செய்யும் நோக்கில் விளம்பரம் எழுதுவார்.
- தாம் சொல்ல வந்த செய்தி மக்களைச் சென்றடையும்வண்ணம் துண்டுப்பிரசுரம் எழுதுவார்.
- பொருத்தமான படங்களுடன் கவர்ச்சிகரமான மொழிநடையைக் கையாண்டு விளம்பரம், துண்டுப்பிரசுரம் என்பவற்றை எழுதுவார்.

**தேர்ச்சி 12.0 :** சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.2 :** சொற்றொடர்களின் பொருளையும் வகையையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம் :** **இரட்டைமொழி, இணைமொழி**

**பாடவேளைகள்** **:** 04

**கற்றற் பேறுகள்**

- இரட்டைமொழி, இணைமொழி என்பவற்றின் இயல்பு பொருள் அறிந்து பயன்படுத்துவார்.
- பேச்சுமொழியில் மட்டுமன்றி எழுத்து வழக்கிலும் இரட்டைமொழி, இணைமொழி சிறப்பிடம் பெறுவதை எடுத்துக்காட்டுகளுடன் கூறுவார்.
- சொற்றொடர்களைத் தமது ஆக்கங்களில் செம்மையாகப் பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- மாணவர்கள் ஏற்கனவே அறிந்து வைத்திருக்கும் இரட்டைமொழி, இணைமொழி என்பவை பற்றிக் கலந்துரையாடல்.
- மாணவர்கள் இத்தொடர்களை இனங்காணச் செய்து விளக்குதல்.
- இத் தொடர்களைக் கையாண்டு, வாக்கியங்கள் கூறச் செய்தல்.
- இரட்டைமொழி, இணைமொழி என்பவற்றைத் தமது ஆக்கங்களில் கையாள வழிகாட்டல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

- இசைபற்றியும் பண்புபற்றியும் குறிப்புப்பற்றியும் அடிச்சொல் இரட்டித்து முழு உருவத்தோடு நிற்பது இரட்டைமொழியாகும். பிரித்தால் பொருள்தராது.
- எதுகை, மோனை என்னும் ஓசைநயம் பற்றியும் எதிர்க்கருத்துப் பற்றியும் இரு சொற்கள் இணைந்து பொருட்செறிவுடையனவாய் வருவது இணைமொழி.

**இரட்டைமொழி**

| | |
|---|---|
| கசகச | விடுவிடு |
| குறுகுறு | கொழுகொழு |
| முணுமுணு | சலசல |
| கடகட | மடமட |
| நடநட | தடதட |

**இணைமொழி**

- அருமை பெருமை
- அக்கம் பக்கம்
- அந்தியும் சந்தியும்
- ஈன இரக்கம்
- உண்டு உடுத்து
- ஊணும் உறக்கமும்
- ஒளிப்பு முறைப்பு
- எலும்புந் தோலும்
- ஏட்டிக்குப் போட்டி
- கணக்கு வழக்கு
- கண்ணீரும் கம்பலையும்
- காரசாரம்
- குறை குற்றம்
- கூடிக் குலாவி
- சாக்குப் போக்கு
- சீரும் சிறப்பும்
- சுற்றும் முற்றும்
- சூதுவாது
- சொத்துச் சுதந்திரம்
- தப்பித்தவறி
- நடையுடை
- பட்டம் பதவி
- போற்றிப் புகழ்ந்து
- வீரதீரம்

## தரவிருத்தி உள்ளீடுகள்

- இரட்டைமொழிகள், இணைமொழிகள் இடம் பெறும் வாக்கியங்கள்.
- டிமைன்தாள்கள்
- எழுதுகருவிகள்
- எழுதுதாள்கள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- இரட்டைமொழி, இணைமொழிகள் என்பவற்றினை இனங்கண்டு கூறுவார்.
- அவை பொருட்சிறப்புக்குப் பெரிதும் உதவுவதை எடுத்து விளக்குவார்.
- இத்தொடர்களைக் கையாண்டு, வாக்கியம் எழுதுவார்.

**தேர்ச்சி 7.0 :** இரசனைக்காகவும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 7.1 :** படைப்புக்களை வாசித்து நயப்பார்.

**விடய உள்ளடக்கம் :** கருங்காற் குறிஞ்சி

**பாடவேளைகள் :** 04

**கற்றற் பேறுகள்**

- ''**கருங்காற் குறிஞ்சி**'' என்னும் கட்டுரையை மௌனமாக வாசித்துக் கிரகிப்பார்.
- இப்பாடப் பகுதியில் நயந்த பகுதியையும் அதற்கான காரணத்தையும் விளக்கிக் கூறுவார்.
- தரவுகளைச் சேர்த்து, இது போன்ற படைப்புக்களைப் படைக்க முன்வருவார்.
- இப்பாடப்பரப்பிலே இடம்பெறும் விழுமியக் கருத்துக்களை முன்வைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- ''**கருங்காற் குறிஞ்சி**'' என்னும் பாடத்தை மௌனமாக வாசித்து விளங்கிக் கூறுதல்.
- கட்டுரையினது பிரதான கருவை இனங்கண்டு கூற வழிகாட்டுதல்.
- இப்பாடப்பரப்பில் காணப்படும் விழுமியக் கருத்துக்களை இனங் கண்டு கூறச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

- சங்ககாலத்தில் எழுந்த நூல்கள் அகம் என்னும் வீட்டு வாழ்வினையும், புறம் என்னும் போர், வீரம் பற்றிய விடயத்தினையும் கருவாகக் கொண்டிருந்தன.
- இந்நூல்களில் வரும் குறிஞ்சிப் பூ, மலைப்பிரதேசம் அதாவது, குறிஞ்சி நிலத்திற்கு உரியது. அது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையே பூக்கும்.
- ஐந்து திணைகள் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் நிலப்பகுப்புகளுக்கேற்ப வாழ்வுக் கோலங்கள் விளங்கப்படுத்தப்படுத்தப்படல்.
- குறுந்தொகை - சங்ககாலத்து அகத்திணைக்குரிய நூல். அன்பு வாழ்வை (காதலை)ப் புலப்படுத்துவது.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- எழுதுகருவிகள்
- எழுதுதாள்கள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- பாடப்பரப்பை கிரகிக்கும் முகமாக மௌனமாக வாசிப்பார்.
- கிரகித்தவற்றை குழுவாக இயங்கி, எழுதிக் காட்சிப்படுத்துவார்.
- கட்டுரையின் முக்கிய கருத்துக்களையும், துணைக்கருத்துக்களையும் பிரித்தறிந்து கூறுவார்.
- பாடக் கேள்விகளுக்கு தெளிவாகப் பதில் எழுதுவார்.

**தேர்ச்சி 13.0 :** மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.3 :** சொற்றொடர்கள் வாக்கியம் என்பவற்றின் வகையையும் அவற்றின் இயல்பையும் அறிந்து, பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம் : வாக்கியங்களை இயைபுற எழுதுதல்**

**பாடவேளைகள் :** 05

### கற்றற் பேறுகள்

- வாக்கியங்களை தொடர்மொழியிலிருந்து பிரித்து எழுதுவார்.
- வாக்கியங்களை இயைபுற எழுதுவார்
- வாக்கிய உறுப்புகளான எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்பன இயைபுற எழுதுவார்.
- வாக்கியங்களை திணை, பால், எண், இடம், காலம் இயைபுற எழுதுவார்.
- கருத்தமைந்த வாக்கியங்களை எழுதுவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- பூரணமான வாக்கியங்களை அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்தல்.
- குழுக்களாக மாதிரி வாக்கியங்களை அலசிய பின்னர் தாமே சுயமாக எழுதி முன்வைத்தல்.
- அதனை அடிப்படையாகக் கொண்டு வாக்கிய உறுப்புகள் பற்றியும் திணை, பால், எண், இடம், காலம் என்பன இயைபுற அமைந்திருப்பதையும் கலந்துரையாடி விளக்குதல்.
- கருத்தமைந்த வாக்கியங்களை எழுதுவதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

### முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்

**வாக்கிய உறுப்புக்கள்**

| | | |
|---|---|---|
| எழுவாய் | - **தம்பி** பந்தை உருட்டினான் | (தம்பி எழுவாய்) |
| செயப்படுபொருள் | - தம்பி **பந்தை** அடித்தான் | (பந்து செயப்படுபொருள் ஐ உருபு மறைந்து வருவது) |
| பயனிலை | - தம்பி பந்தை **எறிந்தான்** | (எறிந்தான் பயனிலை) |

திணை, பால், எண், இடம், காலம் என்பனவற்றில் இயைபுபெறும் வாக்கியங்கள்.

**திணை**

உயர்திணை - மனிதர், தேவர், நரகர்

அஃறிணை - மிருகம், பறவை, முதலிய உயிருள்ள பொருட்கள்
நிலம், நீர் முதலிய பொருட்கள்

**ஐம்பால்**

ஆண்பால் - அவன் வந்தான் (உயர் திணை ஆண்பால்)

பெண்பால் - அவள் வந்தாள் ( உயர் திணைப் பெண்பால்)

பலர் பால் - அவர் வந்தார் (உயர் திணைப் பலர்பால்)

ஒன்றன் பால் - அது வந்தது (அ.்.றிணை ஒன்றன்பால்)

பலவின்பால் - அவை வந்தன (அ.்.றினைப் பலவின்பால்)

**மூவிடம்**

**தன்மை, முன்னிலை, படர்க்கை**

நான் வந்தேன் - தன்மை ஒருமை

நாம் வந்தோம் - தன்மைப் பன்மை

நீ வந்தாய் - முன்னிலை ஒருமை

நீங்கள் வந்தீர்கள் - முன்னிலைப் பன்மை

அவன் வந்தான் - படர்க்கை ஒருமை

அவர்கள் வந்தார்கள் - படர்க்கைப் பன்மை

**எண்**

**ஒருமை, பன்மை**

சித்திரத்தேர் அசைந்து வந்தது - ஒருமை

சித்திரத் தேர்கள் அசைந்து வந்தன - பன்மை

**காலம்**

**இறந்த காலம், எதிர்காலம், நிகழ்காலம்**

இறந்தகாலம் - கமலா வந்தாள்

நிகழ்காலம் - கமலா வருவாள்

எதிர்காலம் - கமலா வருகிறாள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இயைபுபெற்ற வாக்கியங்கள் எழுதிய அட்டைகள்
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்
- பாடநூல்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- வாக்கியங்களை இனங்கண்டு கூறுவார்.
- வாக்கிய வகைகளை விளக்கிக் கூறுவார்.
- வாக்கிய உறுப்புகளை வகைப்படுத்துவார்.
- இவை போன்ற வாக்கியங்களை எழுதுவார்.

## மூன்றாம் தவணை

| இல | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | பாடவேளை | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 01 | 2.0 | 2.1 | படைப்பின் இரகசியம் | 03 | 68 |
| 02 | 13.0 | 13.2 | பெயர்ச்சொல் | 05 | 70 |
| 03 | 1.0 | 1.4 | பொய் சொல்லாதே | 04 | 72 |
| 04 | 13.0 | 13.2 | வினைச்சொல் | 05 | 74 |
| 05 | 5.0 | 5.1 | வீழ்ந்த ஆலமரம் | 02 | 76 |
| 06 | 4.0 | 4.2 | தமிழ் தட்டச்சின் தந்தை | 03 | 77 |
| 07 | 13.0 | 13.3 | வேற்றுமை 1ஆம், 2ஆம், 3ஆம் | 06 | 79 |
| 08 | 3.0 | 3.1 | நாடகம் - பிள்ளை அழுத கண்ணீர் | 04 | 81 |
| 09 | 13.0 | 13.2 | இணைப்பிடைச் சொற்கள் | 03 | 83 |
| 10 | 5.0 | 5.1 | வெண்ணிலா | 02 | 85 |
| 11 | 12.0 | 12.2 | கலைச் சொற்கள் | 04 | 87 |
| 12 | 9.0 | 9.1 | ஒழுக்கமுடைமை | 05 | 89 |
| 13 | 13.0 | 13.3 | புணர்ச்சி | 06 | 92 |

**தேர்ச்சி 2.0 :** சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவகையில் உரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.1 :** தமது உணர்வுகளும் எண்ணங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் உரையாடுவார்.

**விடய உள்ளடக்கம் :** படைப்பின் இரகசியம்

**பாடவேளைகள் :** 03

**கற்றற் பேறுகள்**

- படைப்பின் இரகசியம் எனும் கதையை வாசித்துக் கிரகித்துக் கூறுவார்.
- கிரகித்த விடயங்களைக் குழுவாக இருந்து தமக்குள் உரையாடிக் கூறுவார்.
- கதையின் இடையில் வரும் உரையாடல் அமைப்பை விளக்குவார்.
- கையாளப்பட்டுள்ள மொழிநடை பற்றிக் கலந்துரையாடி, அதனை மேற்கோள்காட்டி எழுதுவார்.
- இதனூடாக வெளிப்படும் விழுமிய கருத்துக்களை விளக்கிக் கூறுவார்.
- தலைப்புக்கேற்பச் சுயமாகப் பேச முன்வருவார்.
- கேட்பவர் மனத்தினை ஈர்க்கும் வண்ணம் பேசுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- கதைகூறும் முறை, பேச்சு பேசும்போது கடைப்பிடிக்க வேண்டிய பொறிமுறைகள் என்பன பற்றிக் கலந்துரையாடி, பாடத்தை அறிமுகஞ் செய்தல்.
- மாணவரை மௌனமாக வாசித்துக் குறிப்புக்களை எழுத வழிநடத்தல்.
- எழுமாறாக மாணவர் வாசித்த விடயம் பற்றிக் கூறச் செய்தல்.
- முழுமையான உள்ளடக்கம் புலப்படும் வகையில் கதையைக் கூறச் செய்தல்.
- அக்கதையில் இடம்பெறும் விழுமியங்களைத் தொகுத்துப் பேச வைத்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key Words) , எண்ணக்கருக்கள்**

- சிறிய கதைகள் பற்றிய தெளிவு
- உரையாடல் மூலம் மெல்லிய கொடியில் பெரிய பூசணிக்காய் காய்த்திருப்பது, பெரிய ஆலமரத்தில் மிகச் சிறிய பழம் காய்த்திருப்பது பற்றிய படைப்பின் ஆச்சரியம் பற்றிப் புலப்படுத்தியமை.

- அரும்பதங்களுக்கான பொருளை அகராதியின் துணைகொண்டு எழுதுதல்
  - சுரக்குடுக்கை
  - கட்டையைச் சாத்துதல்
  - படைப்பு ரகசியம்
  - மூக்காந் தண்டு
  - கட்டுச்சோறு
  - நாழி
  - ஓரிப்பான

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- சிறிய கதைக்கேற்ற படமொன்று
- கணினி

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- கதையில் வரும் விழுமியக் கருத்தைத் தொகுத்துக் கூறுவார்.
- பாடப்பரப்பின் மூலம் விருத்தி செய்த மொழித்திறனைத் தமது பேச்சில் வெளிப்படுத்துவார்.
- படைப்பின் இரகசியத்தை எடுத்துக்காட்டுகளுடன் வெளிப்படுத்திப் பேசுவார்.
- தலைப்புடன் தொடர்புடைய ஆக்கங்களைப் படைப்பார்.
- தமது மொழிநடையில் இந்த விடயம் பற்றிக் கலந்துரையாடுவார்.

**தேர்ச்சி 13.0 :** மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.2 :** சொற்களின் வகையையும் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம் :** பெயர்ச்சொல்

**பாடவேளைகள் :** 05

**கற்றற் பேறுகள்**

- பெயர்ச்சொற்களுக்கான வரைவிலக்கணத்தைக் கூறுவார்.
- சொற்களின் வகையை அறிந்து கூறுவார்.
- பெயர்ச்சொற்களை வகைப்படுத்தி, அவற்றை இனங்கண்டு கூறுவார்.
- பெயர்ச்சொற்களைப் பொருத்தமான முறையிற் பயன்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பெயர்ச்சொற்கள் பற்றி அறிமுகம் செய்தல்.
- சொற்களின் வகைகள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுதல்.
- ஏற்கெனவே கற்ற பெயர்ச்சொற்கள் (ஆறு), மூவிடப் பெயர்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- பெயர்ச்சொற்கள் பற்றி எழுமாறாகக் கேள்விகளைக் கேட்டு, ஞாபகமூட்டல்.
  - மாற்றுப்பெயர்
  - தொகைப்பெயர்
  - கூட்டுப்பெயர்
  - தொழிற்பெயர்
  - வினையாலணையும்பெயர்
  - ஆக்கப்பெயர்
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை செயற்படுத்தல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

- **மாற்றுப் பெயர்**

  ஒரு பெயர்ச்சொல்லுக்குப் பதிலாக பயன்படுத்தக் கூடிய பெயர்ச்சொல் மாற்றுப்பெயர் எனப்படும்.

  உதாரணம்: நீ, நான், அவன்

- **தொகைப்பெயர்**

  உதாரணம் : இருசுடர் - சூரியர், சந்திரர்

  முக்கனி - மா, பலா, வாழை

  நாற்கணம் - உயிர், வல்லினம், மெல்லினம், இடையினம்

- **கூட்டுப்பெயர்**

  உதாரணம் : வானொலி, மின்சாரம், தொலைக்காட்சி

- **தொழிற்பெயர்**

  உதாரணம் : ஓடுதல், நடத்தல், பாடுதல்

- **வினையாலணையும்பெயர்**

  உதாரணம் : வந்தவன், வந்தவனை, ஓடியவன்

- **ஆக்கப்பெயர்**

  உதாரணம் : முதலாளி, அறிவியல், புத்திசாலி

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- சொல்லட்டைகள்
- மேந்தலை எறியி (OHP)
- கணனி
- டிமைன்தாள்கள்
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- பெயர்ச்சொற்களின் வகைகளை வரைவிலக்கணப்படுத்துவார்
- மாற்றுப்பெயர், தொகைப்பெயர், கூட்டுப்பெயர், ஆக்கப்பெயர், தொழிற்பெயர் வினையாலணையும்பெயர் முதலியவற்றை இனங்கண்டு எழுதுவார்.
- இவற்றைத் தமது ஆக்கங்களில் பொருத்தமாகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி 1.0 :** பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.4 :** செயல் திறனும் வினைத்திறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார்.

**விடய உள்ளடக்கம் :** பொய் சொல்லாதே

**பாடவேளைகள் :** 04

## கற்றற் பேறுகள்

- நாட்டார்பாடல்களைச் செம்மையாக வாசிப்பார்.
- பாடல்பாடப்படும் சந்தர்ப்பம் பற்றித் தமக்குள் கலந்துரையாடுவார்.
- நாட்டார்பாடல்களில் வெளிப்படுத்தப்படும் உணர்வு பூர்வமான விபரிப்புக்களை விளக்குவார்.
- விழுமியக் கருத்தை எடுத்துக் கூறுவார்.
- விழுமியத்துடன் வாழ வேண்டும் என்ற எண்ணத்தை வெளிப்படுத்துவார்.
- நாட்டார்பாடல்களை இசையோடு பாடுவார்.
- நாட்டார்பாடல்களில் வெளிப்படுத்தப்படும் விழுமியங்களை எடுத்துக் கூறுவார்.
- நாட்டார்பாடல்களில் இடம்பெறும் பிரதேச மொழிவழக்குகளை எடுத்துக்காட்டுக்கள் மூலம் முன்வைப்பார்.
- அப்பாடல்களில் கூறப்படும் திரண்ட பொருளைத் தமது மொழிநடையில் கூறுவார்.
- பல்வேறு நாட்டார்பாடல்களைத் தொகுத்து அவை கூறும் மனித வாழ்வுக்கோலங்கள் பற்றிய பேச்சு ஒன்றினை நிகழ்த்துவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- பொய் சொல்லாதே என்ற பாடலுக்கு ஏற்ற படங்களைக் காட்சிப்படுத்துதல்.
- நாட்டார்பாடல் அடங்கிய ஒலிப் பேழை.
- கொடுக்கப்பட்ட நாட்டார்பாடல் பாடப்படும் சந்தர்ப்பத்தை மாணவருடன் கலந்துரையாடிப் பாடத்தை ஆரம்பித்தல்.
- நாட்டார்பாடலை அவதானித்துக் கேட்க, மாணவரை வழிப்படுத்தல்.
- விழுமியக் கருத்தை எடுத்துக் காட்டுதல்.
- நாட்டார்பாடல் சம்பந்தமான பல்வேறு தரவுகளை, தகவல்களைச் சேகரிக்க மாணவரை ஊக்குவித்தல்.
- கேட்டுக் கிரகித்த பாடலைத் தாமும் பாடுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

## முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்

- நாட்டார்பாடல்களைப் பாடியவர்கள் பாமரர்.
- வேடிக்கை உணர்வுகள்
- **அரும்பதங்க**ளுக்கான பொருளை அகராதியின் துணைகொண்டு எழுதுதல்
    - வீட்டின் முற்றம்
    - வடக்கன் மாடு
    - வாய்மண்
    - பகிடி

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- படங்கள் ஒட்டப்பட்ட டிமைன்தாள்
- பாடலை இசையோடு பாடிய ஒலிப்பேழை
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- நாட்டார்பாடலை ஒலிக்கச்செய்து அதை அவதானிப்பதனூடாக, கருத்துக்களை வெளிக்கொணர்வர்.
- பாடலில் இடம்பெறும் மொழிப் பிரயோகம் பற்றிக் கலந்துரையாடி, அவர்களது கருத்துக்களை முன்வைப்பார்.
- இவைபோன்ற வேறு நாட்டார்பாடல்களைத் தேடித் தொகுப்பார்.
- நாட்டார்பாடல்களில் இடம்பெறும் வாழ்வியல் அம்சங்களைக் கூறுவார்.
- விழுமியக் கருத்தைக் கூறிக்காட்டுவார்.

**தேர்ச்சி 13.0 :** மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.2 :** சொற்களின் வகையையும் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம் :** **வினைச்சொல்**

**பாடவேளைகள் :** 05

**கற்றற் பேறுகள்**

- வினைச்சொற்களுக்கான வரைவிலக்கணத்தைக் கூறுவார்.
- வினைச்சொற்களை இனங்காண்பார்.
- வினைச் சொற்களின் இயல்பைக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- வினைச்சொற்கள் பற்றிக் கலந்துரையாடி பொருத்தமான முறையில் பாட அறிமுகம் செய்தல்.
- வினைச்சொற்கள் அடங்கிய சொல்லட்டையைத் தயார் செய்தல்.
- வினைச்சொல் என்றால் என்ன என்பதை விளக்குதல்.
- வினைச்சொல்லின் முக்கிய இயல்பை விளக்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

- ஒரு செயலைக் குறிப்பது வினைச்சொல்

  உதாரணம்: நடந்தாள்

  பாடினாள்

- வினைச் சொல்லின் இயல்பு காலங்காட்டுதல்

| | | | |
|---|---|---|---|
| உதாரணம் : | கொடுத்தாள் | - | இறந்த காலம் |
| | கொடுக்கின்றாள் | - | நிகழ் காலம் |
| | கொடுப்பாள் | - | எதிர் காலம் |
| | ஓடினான் | - | இறந்த காலம் |
| | ஓடுகிறான் | - | நிகழி காலம் |
| | ஓடுவான் | - | எதிர்காலம் |

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- சொல்லட்டைகள்
- டிமைன்தாள்கள்
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- வினைச்சொற்களுக்கான வரைவிலக்கணத்தை எழுதுவார்.
- வினைச்சொல்லின் இயல்புகளைக் கூறுவார்.
- வினைச்சொற்களை இனங்கண்டு, தமது ஆக்கங்களில் பொருத்தமாகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி 5.0** : ஆக்கபூர்வமான செயல் திறன் உடைய வாசகராகச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.1** : விடயத் தெளிவோடு வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம் : வீழ்ந்த ஆலமரம்**

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்**

- "**வீழ்ந்த ஆலமரம்**" என்ற ஆக்கத்தில் வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.
- கதை உணர்த்தும் உணர்வு வெளிப்பாட்டைத் தெளிவுபடுத்துவார்.
- உரையாடல் பகுதிகளைப் பாத்திரமேற்று நடித்துக் காட்டுவார்.
- மௌனமாக, கருத்தூன்றி வாசித்து உள்ளடக்க விடயத்தைத் தெளிவுபடுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- வாசிப்புப் பொறிமுறைக்கு அமையக் குழுநிலையில் பகுதி பகுதியாகச் சகபாடிகளுடன் இணைந்து வாசிக்க இடமளித்தல்.
- படைப்பு வெளிப்படுமுறை, பகுதிகளுக்கிடையேயான தொடர்பு படிமுறை வளர்ச்சி என்பவற்றைக் குழுக் கலந்துரையாடல் வாயிலாக தெளிவுபடுத்துதல்.
- தனித்தனியான மௌன வாசிப்பிற்கு நெறிப்படுத்துதல்.
- விடய உள்ளடக்கப் பரப்புக் குறித்து மீண்டும் கலந்துரையாட வழிப்படுத்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

- லோகல்
- பண்டு
- இலாகா
- உத்தியோஸ்தர்
- அத்தி பூத்தது
- ஒடுக்கத்துடன்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- எழுதுகருவிகள்
- எழுதுதாள்கள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- வாசிப்பு பொறிமுறைநுட்பங்களை வெளிப்படுத்தித் துலங்குவார்.
- ஆக்கம் வெளிப்படுத்தும் விடயப் பரப்பைத் தெளிவாக்குவார்.
- உணர்ச்சி வெளிப்பாடு, தொனிவேறுபாடு, கொண்டு கூட்டி வாசிக்கும் திறன், அவசியப்படும் இடங்களில் பதம்பிரித்து வாசித்தல் என்ற ஆற்றல்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி 4.0 :** தமது எண்ணங்களைக் கேட்போர் உள்ளங் கொள்ளத்தக்க வகையில் எடுத்துரைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 4.2 :** எடுத்துக்கொண்ட விடயத்துக்குப் பொருத்தமாக, பொருட்செறிவோடு பேச்சு நுட்பங்களைக் கையாண்டு பேசுவார்.

**விடய உள்ளடக்கம் : தமிழ்த் தட்டச்சின் தந்தை**

**பாடவேளைகள் :** 03

**கற்றற் பேறுகள்**

- ஆங்கிலத் தட்டச்சின் உபயோகம் பற்றி எடுத்துக் கூறுவார்.
- தமிழ்த் தட்டச்சின் வருகை பற்றிக் கூறுவார்.
- தமிழ்த் தட்டச்சின் தந்தை பற்றி விளக்கிக் கூறுவார்.
- குறித்த தலைப்பிற் பேசுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- ஆக்கமொன்றின் பல்வேறு பகுதிகள் தொடர்புபட்டுள்ளமையைக் குழுக்கலந்துரையாடலில் கூறச் செய்தல்.
- தலைப்பொன்றுக்கு அமைவாக பேச்சொன்றை தயார்படுத்துதல்.
- விடய உள்ளடக்கம் வளர்த்தெடுத்துச் செல்லப்பட்டு, கருத்துத் தெளிவுடன் வெளிப்படுத்தும் ஆற்றலை வளர்க்கும் வகையிலான குழுச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) எண்ணக்கருக்கள்**

- தட்டச்சு
- யந்திரம்
- குமாஸ்தா
- சுருக்கெழுத்து
- முதலாம் உலகயுத்தம்
- ஒடுக்கத்துடன்

### தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்

### கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- ஆங்கிலத் தட்டச்சி பற்றிக் கூறுவார்.
- தமிழ்த் தட்டச்சி பற்றிக் கூறுவார்.
- தமிழ்த் தட்டச்சின் தந்தை பற்றிக் கூறுவார்.
- தமிழில் உள்ள எழுத்துக்களைப் பட்டியற்படுத்துவார்
- விசைப்பலகையின் உபயோகம் பற்றிய தெளிவினைப் பெறுவார்.

**தேர்ச்சி 13.0 :** மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.3 :** சொற்றொடர் வாக்கியம் என்பனவற்றின் வகையையும் அவற்றின் இயல்பையும் அறிந்து பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம் :** **1ஆம், 2ஆம், 3ஆம் வேற்றுமைகள்**

**பாடவேளைகள் :** 06

**கற்றற் பேறுகள்**

- வேற்றுமையை வரைவிலக்கணப்படுத்திக் கூறுவார்.
- வேற்றுமை உருபுகள் பயன்படும் விதத்தினை அறிந்து கூறுவார்.
- வேற்றுமை உருபு வெளிப்பட்டும் வெளிப்படாமலும் நின்று, தொழிற்படுவதை எடுத்துக்காட்டுவார்.
- வேற்றுமைக்கான உருபுகளையும் பொருள்களையும் எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- வேற்றுமை அட்டவணையைக் காட்சிப்படுத்தல்.
- உருபு இன்றி (முதலாம் / எழுவாய்) வேற்றுமை தொழிற்படுவதை எடுத்துக்காட்டுதல்.
- வேற்றுமை உருபு வெளிப்பட்டும் வெளிப்படாமலும் நின்று, தொழிற்படுவதை எடுத்துக் காட்டுதல்.
- வாக்கியத்தின் பெயர்ச்சொற்களின் இலக்கணத் தொழிற்பாட்டை வேறுபடுத்துவது வேற்றுமை என்பதை உதாரணம் காட்டி விளக்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

1. முதலாம் வேற்றுமை – எழுவாய் வேற்றுமை – உருபில்லை

   உதாரணம்

   - உழவன் பாடுகிறான்
   - அவர் யார்?

2. இரண்டாம் வேற்றுமை – செயப்படுபொருள் வேற்றுமை – ஐ உருபு

   உதாரணம்

   - வீட்டைக் கட்டினான் - ஆக்கப்படுபொருள்
   - சுவரை இடித்தான் - அழிக்கப்படுபொருள்

- இலங்கையை அடைந்தான் - அடையப்படுபொருள்
- மனையைத் துறந்தான் - துறக்கப்படுபொருள்
- காளையை ஒத்தான் - ஒக்கப்படுபொருள்
- பொருளை உடையான் - உடைமைப்பொருள்

3. மூன்றாம் வேற்றுமை – உடன் நிகழ்ச்சி வேற்றுமை – ஆல், ஆன், ஒடு, ஓடு ஆகிய உருபுகள்

   உதாரணம்

   - வாளால் வெட்டினான்
   - அறத்தான் வருவதே இன்பம்

     (இவை கருவிப் பொருள் தருவன.)

   - சிற்பியால் சிலை செய்யப்பட்டது
   - மன்னனால் கோயில் கட்டப்பட்டது

     (இவை கருத்தாப் பொருள் தருவன.)

   - தாயொடு சேயும் வந்தான்.
   - தாயோடு சேயும் வந்தாள்

     (இவை உடன் நிகழ்ச்சிப் பொருள் தருவன.)

**இலக்கணத் தொழிற்பாடு**

- **தாமரை** மலர்ந்தது . முதலாம் வேற்றுமை - எழுவாய்
- நான் **தாமரையைப்** பறித்தேன் - இரண்டாம் வேற்றுமை - செயப்படு பொருள்
- **தாமரைப்** பூவினால் அர்ச்சித்தேன் - மூன்றாம் வேற்றுமை - கருவிப் பொருள்
- **மாணவரால்** தாமரைப் பூமாலை கட்டப்பட்டது

  - மூன்றாம் வேற்றுமை - கருத்தாப்பொருள்

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாட நூல்
- 1ஆம், 2அம், 3ஆம் வேற்றுமைகள் அடங்கிய அட்டவணை
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- வேற்றுமையை வரைவிலக்கணப்படுத்திக் கூறுவார்.
- வேற்றுமை உருபுகளையும் பொருள்களையும் அட்டவணைப்படுத்துவார்.
- பொருத்தமான எடுத்துக்காட்டுகளைத் தந்து வேற்றுமை பற்றி விளக்கிக் கூறுவார்.
- வேற்றுமைகளை இனங்கண்டு, அவற்றைத் தமது ஆக்கங்களில் கையாள்வார்.

**தேர்ச்சி 3.0 :** பல்வேறு பாத்திரங்களை ஏற்று அவற்றின் இயல்புகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திப் பேசுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பாத்திரங்களின் இயல்புகளுக்கேற்ப நடித்துப் பேசுவார்.

**விடய உள்ளடக்கம் :** **பிள்ளை அழுதகண்ணீர்**

**பாடவேளைகள் :** 04

## கற்றற் பேறுகள்

- நாடகப் பாத்திரங்களின் உள்ளத்து உணர்வுகளை வெளிக்கொணரும் வகையில் பாவனை செய்து, உச்சரிப்புத் தெளிவுடன் பேசுவார்.
- உணர்ச்சி வெளிப்பாடுகளுக்கேற்ப, தொனி வேறுபாட்டை வெளிப்படுத்துவார்.
- ஆடு, எலி, வயல், குளம், தவளை, கொக்கு, கொத்தனார், மலை, அலை என்பன பாத்திரங்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளமையினை விளக்கிக் கூறுவார்.
- குழு ஒருமைப்பாட்டுணர்வை வெளிப்படுத்தி இயங்குவார்.
- விழுமியக் கருத்துக்களையும் படிப்பினைகளையும் தொகுத்துப் பட்டியற்படுத்துவார்.
- நாடகத்தில் இடம்பெறும் பிரதேச மொழிநடை பற்றி விளக்கிக் கூறுவார்.
- நாடகப்பரப்பில் இடம்பெறும் விழுமிய உணர்வுகள், படிப்பினைகள் பற்றிக் கூறுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- நாடகக் கதாபாத்திரங்கள் பற்றி மாணவருடன் கலந்துரையாடிப் பாட அறிமுகம் செய்தல்.
- கதையாகச் சுருக்கிக் கூறுதல்.
- மாணவரைக் குழு நிலையில் வாசிக்கச் செய்தல்.
- பாத்திரமேற்று, ஏற்ற உணர்ச்சி நிலைகளைப் புலப்படுத்தும்வண்ணம் நடித்தல்.
- ஒரு குழுவினரை நடிக்கச் செய்து, மற்றக் குழுவினருடன் சரி, பிழை பற்றிக் கலந்துரையாடுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

## முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்

- கடுங்கோடை பற்றிய விபரிப்பு
- **பேச்சு மொழிச் சொற்கள்**
  - வைச்ச
  - அச்சாப்பிள்ளை
  - குடிச்ச
  - ஆக்கினைகள்

- செய்றது
- அழமெண்டு
- தாறியளா
- குடிச்சிட்டன்
- எங்க போவள்
- தண்ணீர்

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- மாணவரை நடிக்கச் செய்து, அதனை ஒலிப்பதிவு செய்த ஒலிப்பேழை
- டிமைன்தாள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- நாடகத்தைப் பாத்திரமேற்று நடிப்பார்.
- நாடகத்தில் இடம்பெறும் பேச்சுவழக்குச் சொற்களைப் பட்டியற்படுத்துவார்.
- கடுங்கோடை காரணமாக உயிரினங்கள் யாவும் அல்லல் அடையும் விதத்தினை எடுத்துக் காட்டுவார்.
- பாடப்பரப்பில் இடம்பெறும் விழுமியம், படிப்பினை பற்றிக் கலந்துரையாடிக் கூறுவார்.

**தேர்ச்சி 13.0** : மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.2** : சொற்களின் வகையையும் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : **இணைப்பிடைச் சொற்கள்**

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்**

- சொற்களில், இணைப்பிடைச்சொற்கள் பெறும் இடத்தை ஆதாரத்துடன் விளக்குவார்.
- இணைப்பிடைச் சொற்களை இனம்கண்டு எழுதுவார்.
- இணைப்பிடைச் சொற்களைத் தமது ஆக்கங்களிலே பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- இணைப்பிடைச் சொற்களைக் கையாண்டு, எழுதிய வாக்கியங்களைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடிப் பாடத்தை ஆரம்பித்தல்.
- அவற்றிலே இடம்பெறும் இணைப்பிடைச்சொற்களை இனம்காண வழிநடத்தல்.
- இணைப்பிடைச் சொற்களைக் கையாண்டு சிறுசிறு வாக்கியங்களை எழுதுவித்தல்.
- வாக்கியத்தினுள்ளும், வாக்கியங்களுக்கிடையிலும் வரும் இணைப்பிடைச் சொற்கள் பற்றி விளக்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

- வாக்கியத்தினுள்ளும், வாக்கியங்களுக்கிடையிலும் வரும் இணைப்பிடைச் சொற்களுக்கு உதாரணம்:
  - சூறாவளி வீசியது; **அதனால்** பாரிய சேதங்கள் ஏற்பட்டன.
    சூறாவளி வீசிய**தனால்** பாரிய சேதங்கள் ஏற்பட்டன.
  - நீ இதனைச் செய்யவேண்டும்; **அல்லது** நான் செய்ய வேண்டும்.
    நீ **அல்லது** நான் இதனைச் செய்ய வேண்டும்.
  - கடுகு சிறிது; **ஆயினுங்** காரம் பெரிது.
    கடுகு சிறி**தாயினும்** காரம் பெரிது.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- எழுதுகருவிகள்
- செயற்பாட்டுப் பத்திரம்
- எழுதுதாள்கள்
- வசனம் எழுதிய அட்டைகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- வாக்கியங்களில், பந்திகளில் இடம்பெறும் இணைப்பிடைச்சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- இணைப்பிடைச் சொற்களைக் கையாண்டு வாக்கியங்கள் எழுதுவார்.
- வாக்கியத்தினுள்ளும், வாக்கியங்களுக்கிடையிலும் இணைப்பிடைச் சொற்களைக் கையாண்டு எழுதுவார்.

**தேர்ச்சி 5.0 :** ஆக்கபூர்வமான செயல்திறன் உடைய வாசகராகச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.1 :** விடயத்தெளிவோடு வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம் : வெண்ணிலாவே**

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள்**

- பாடல்களைத் தெளிவாகவும் சந்திபிரித்தும் வாசிப்பார்.
- பாடல்களைக் கொண்டுகூட்டி வாசிப்பார்.
- பாடல்களின் பொருளை அறிந்து கூறுவார்.
- பாடல்களை இசையுடன் பாடி மகிழ்வார்.
- பாடல்களில் தனக்குப் பிடித்த அடிக்கு நயம் கூறுவார்.
- பாடல்களில் காணப்படும் கற்பனை ஆற்றலை எழுதி வாசிப்பார்.
- நிலவு பற்றிய தனது எண்ண ஓட்டத்தின் அடிப்படையில் பாடலைச் சுயமாக எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- வேறொரு பாடலைக் காட்சிப்படுத்தி, கலந்துரையாடிப் பாடப்பிரவேசத்தைத் திட்டமிடல்.
- பாடலாசிரியர் தொடர்பாக விளக்கமளித்தல்.
- பாடல்களை உரிய முறையில் திருத்தமாக வாசிக்கச்செய்தல்.
- பாடல்களைத் தனியாகவும் குழுவாகவும் இசையுடன் பாடவைத்தல்.
- பாடல்களில் காணப்படும் கற்பனை ஆற்றலை விளக்கல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

- பாடலை எழுதியவர் - எம். ஆதம்லெவ்வை
- இவர் பொத்துவிலைச் சேர்ந்தவர்.
- **அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| மகிழ | - | இன்புற |
| எழில் | - | அழகு |
| தண்மதி | - | குளிர்நிலவு |
| கார்மேகம் | - | மழைமுகில் |
| மீன்கள் | - | நட்சத்திரம் |
| உருமாற்றம் | - | வளர்தல், தேய்தல் |

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- நிலவு பற்றிய வேறு கவிதைகள்
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்
- அகராதி

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- விடயத் தெளிவோடு பாடலை வாசிப்பார்.
- பாடலின் பொருளை அறிந்து கூறுவார்.
- பாடல்களை இசையுடன் பாடுவார்.
- பாடல்களில் தனக்குப் பிடித்த பகுதிக்கு நயம் எழுதி வாசிப்பார்.
- பாடல்களில் காணப்படும் கற்பனைத் திறனை விபரிப்பார்.

**தேர்ச்சி 12.0 :** சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.2 :** சொற்றொடர்களின் பொருளையும் வகைகளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம் :** **கலைச்சொற்கள்**

**பாடவேளைகள் :** 04

**கற்றற் பேறுகள்**

- நடைமுறையிலுள்ள கலைச்சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- கலைச்சொற்களைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பொருத்தமாகக் கையாள்வார்.
- இனங்கண்ட கலைச்சொற்களுக்கு நிகரான ஆங்கிலமொழிச் சொற்களைக் குறிப்பிடுவார்.
- தனது ஆக்கங்களில் கலைச்சொற்களைப் பொருத்தமாக எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- மாணவரோடு கலந்துரையாடி, பொருத்தமான பாடப்பிரவேசத்தைத் தெரிவு செய்தல்.
- கலைச்சொற்கள் அடங்கிய சிறிய கதையொன்றை, அல்லது கட்டுரை ஒன்றினை மாணவருக்குக் காட்சிப்படுத்தி, அதில் காணப்படும் ஆங்கிலமொழிச் சொற்களை இனங்காணச் செய்தல்.
- இனங்கண்ட சொற்களைத் தொகுத்தெடுத்துக் காட்சிப்படுத்தல்.
- காட்சிப்படுத்திய சொற்கள் குறிக்கும் தமிழ்ச் சொற்கள் பற்றிக் கலந்துரையாடல்.
- கலைச்சொல்லாக்கத்தின் முக்கியத்துவம் பற்றி விளக்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

- வேற்று மொழிகளில் அமைந்த அதிக சொற்பிரயோகங்களுக்கான தமிழ்ச் சொற்களும் அவ்வப்போது உருவாக்கப்பட்டு வருகின்றன. அவை கலைச் சொற்கள் எனப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| இன்ரநெற் (*Inter net*) | - | இணையம் |
| ஈமெயில் (*E - Mail*) | - | மின்னஞ்சல் |
| கொம்பியூட்டர் சொப்வெயர் (*Computer software*) | - | கணனி மென்பொருள் |
| வெப்சைற் (*web site*) | - | வலைத்தளம் |

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- சொல்லட்டைகள்
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்
- மேந்தலை எறியி (OHP)

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- கலைச்சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- தமிழ்க் கலைச்சொற்களுக்கான பொருத்தமான கலைச்சொற்களைக் குறிப்பிடுவார்.
- கலைச்சொற்களைத் தமது ஆக்கங்களில் பொருத்தமுறப் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி 9.0 :** வாசித்துக் கிரகித்தவற்றைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 9.1 :** வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம் :** ஒழுக்கமுடைமை

**பாடவேளைகள் :** 05

**கற்றற் பேறுகள்**

- திருக்குறள், நீதிநூல்களில் சிறப்பிடம் பெறுவதை எடுத்துக் கூறுவார்.
- திருவள்ளுவர் பற்றியும் திருக்குறள் பற்றியும் மேலதிக தரவுகளைச் சேகரிப்பார்.
- குறள்களைச் சந்திபிரித்தும் கொண்டுகூட்டியும் வாசிப்பார்.
- உச்சரிப்புத் தெளிவுடன் குறள்களை ஓதுவார்.
- அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறுவார்.
- குறள்கள் தரும் பொருளைத் தமது மொழிநடையில் எழுதுவார்.
- ஒழுக்கம் பற்றி வள்ளுவர் கூறியனவற்றைக் கட்டுரையாக எழுதுவார்.
- கொடுக்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுவார்.
- இப்பகுதியில் இடம்பெறும் விழுமியங்களைச் சுட்டிக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- திருவள்ளுவருடைய படத்தைக் காட்டி, பாட அறிமுகஞ் செய்தல்.
- நீதிநூல்களுள், திருக்குறளின் சிறப்புப் பற்றி மேலதிக விளக்கம் கொடுத்தல்.
- சிறப்பாகப் பாடக்கூடிய மாணவர்களைக்கொண்டு பாவோதச் செய்தல்.
- உச்சரிப்புத்தெளிவு, தொனிவேறுபாடுகள் இடம்பெற குறளை மாணவர் ஓத வழிநடத்தல்.
- அரும்பதங்களுக்குப் பொருள் கூறுதல்.
- பொழிப்பினைக் கூறி, அதனை மாணவர் தமது மொழிநடையில் எழுத வழிகாட்டுதல்.
- விழுமியக் கருத்துக்களைக் கண்டறிந்து, எழுத வழிநடத்தல்.
- வினாக்கள் கொடுத்து, விடையெழுதச் செய்தல்.
- குறள்களை அடிப்படையாகக் கொண்டு, கட்டுரை எழுதுவித்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

- திருவள்ளுவர் - படம்
- திருவள்ளுவர், திருக்குறள் பற்றிய விபரங்கள்

- **அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| விழுப்பம் | - | பெருஞ் சிறப்பு |
| ஓம்பப்படும் | - | சிறந்ததாகப் போற்றப்படும் |
| பரிந்து | - | துன்புற்றுங்கூட |
| தேரினும் | - | தெரிந்து கொண்டாலும் |
| குடிமை | - | நற்குலத்தினை உடைமை |
| இழுக்கம் | - | அவ்வொழுக்கத்தினின்றும் தவறுதல் |
| பார்ப்பான் | - | வேதத்தைப் படிப்பவன் |
| அழுக்காறு | - | பொறாமை |
| ஒல்கார் | - | நீங்கமாட்டார் |
| உரவோர் | - | மனபலம் உடையோர் |
| இடும்பை | - | துன்பம் |
| ஒல்லாவே | - | முடியாத ஒன்றாகும் |
| வழுக்கியும் | - | மறந்தேனும் |

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- திருவள்ளுவர் படம்
- திருக்குறள்
- குறள்கள் எழுதப்பட்ட டிமைன்தாள்
- எழுதுகருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- குறள்கள் தரும் பொருளைச் சுருக்கிக் கூறுவார்.
- குறளில் இடம்பெறும் அருஞ்சொற்களுக்குப் பொருள் எழுதுவார்.
- விழுமியக் கருத்துக்களை எடுத்து விளக்குவார்.
- குறளை உச்சரிப்புத் தெளிவோடு எழுதுவார்.
- ஏனைய குறள்களையும் விரும்பிக் கற்கும் திறன் பெறுவார்.

## திருவள்ளுவர்




திருவள்ளுவர் பிறப்புப் பற்றிய சரியான கணிப்புப் பெறப்படவில்லை. எனினும் அவர் சென்னையிலுள்ள மயிலாப்பூரில் பிறந்ததாகவும், மதுரையில் பிறந்ததாகவும், ஆதி - பகவன் என்ற பெற்றோருக்குப் பிறந்ததாகவும் சொல்லப்படுகின்றது. தமிழிலக்கிய வரலாற்றில் திருக்குறள் சங்கமருவியகால அற நூல்களில் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளது.

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு** என்று தொடங்கி, ஈரடிக் குறளில் உலகத் தத்துவங்கள் அனைத்தையும் திருக்குறள் என்னும் உன்னதப் படைப்பில் மக்களுக்கு எடுத்துச் சொன்னவர் திருவள்ளுவர். இவர் உலகளாவிய தத்துவங்களைக் கொண்ட திருக்குறளைப் படைத்து உலக இலக்கிய அரங்கில் தமிழ்மொழிக்கென்று ஓர் உயர்ந்த இடத்தை நிலைபெறச் செய்தவர். இவர் உலக மக்களால் **தெய்வப்புலவர், பொய்யில் புலவர், நாயனார், தேவர், செந்நாப்போதர், பெருநாவலர், பொய்யாமொழிப் புலவர்** என்றெல்லாம் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றார். அவர் எழுதிய திருக்குறள், வாழ்வியலின் எல்லா அங்கங்களையும் இனம், மொழி, பாலின பேதங்களின்றி காலம் கடந்தும் பொருந்துவன போல் கூறியுள்ளதால், திருக்குறளைச் சிறப்பிக்கும்விதமாக, **உலகப் பொதுமறை, முப்பால், ஈரடி நூல், உத்தரவேதம், தெய்வநூல், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, தமிழ்மறை, திருவள்ளுவம்** போன்ற பல பெயர்களால் சிறப்பித்து அழைக்கின்றனர்.

### திருக்குறள்

- அறத்துப்பால் - 38 அத்திகாரங்கள்
- பொருட்பால் - 70 அதிகாரங்கள்
- காமத்துப்பால் (இன்பத்துப்பால்) - 25 அத்திகாரங்கள்

133 அதிகாரங்கள் உள்ள திருக்குறள், ஒரு அத்திகாரத்தில பத்து ஈரடி குறள்கள் என மொத்தம் 1330 குறள்களைக் கொண்டு அமைந்துள்ளது.

திருவள்ளுவர் **ஞானவெட்டியான், பஞ்சரத்னம்** ஆகிய மருத்துவ நூல்களை இயற்றியதாகப் பலரும் தெரிவிக்கின்றனர். திருவள்ளுவருடைய 30 அடிச் சிலை தமிழ்நாட்டின் கன்னியாகுமரித் கடலிலுள்ள பாறைமீது அமைந்துள்ளது. சென்னையில் வள்ளுவர்கோட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 1330 குறள்களும் இங்கு பொறிக்கப்பட்டுள்ளன. லண்டனிலுள்ள **ஸ்கூல் ஓரியண்டல்** மற்றும் **ஆபிரிக்கன் ஸ்டடீஸ்** என்னும் கல்வி நிறுவனங்களில் அவரது திருவுருவச்சிலைகள் நிறுவப்பட்டுள்ளன.

**தேர்ச்சி 13.0 :** மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.3 :** சொற்றொடர், வாக்கியம் என்பனவற்றின் வகையையும், அவற்றின் இயல்பையும் அறிந்து பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம் :** புணர்ச்சி

**பாடவேளைகள் :** 06

**கற்றற் பேறுகள்**

- புணர்ச்சியை வரைவிலக்கணப்படுத்திக் கூறுவார்.
- புணர்ச்சியானது இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என இருவகைப்படும் என்பதை எடுத்துக் கூறுவார்.
- இயல்புப் புணர்ச்சியை விளக்கி உதாரணங்கள் கூறுவார்.
- விகாரப் புணர்ச்சியானது தோன்றல், திரிதல், கெடுதல் என மூன்று வகையாக அமையும் என்பதைக் கூறுவார்.
- விகாரப் புணர்ச்சியின் ஒவ்வொரு வகைக்கும் உதாரணம் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- நிலைமொழியும் வருமொழியும் கொண்ட வாக்கியங்களை வழங்கி புணர்த்த வழிகாட்டுதல்.
- புணர்த்திய வழிகாட்டலுடன் வரைவிலக்கணப்படுத்திக் கூறுதல்.
- புணர்த்தும் போது இயல்பையும் விகாரத்தையும் விளக்குதல்.
- இயல்புப் புணர்ச்சியைத் தெளிவாக விளக்குதல்.
- விகாரப் புணர்ச்சியின் வகைகளுக்கு உதாரணம் காட்ட வழிப்படுத்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words) , எண்ணக்கருக்கள்**

- நிலைமொழி பற்றிய விளக்கம்
- வருமொழி பற்றிய விளக்கம்
- புணர்ச்சி பற்றிய விளக்கம்
- இயல்புப் புணர்ச்சி பற்றிய விளக்கம்
- விகாரப் புணர்ச்சி பற்றிய விளக்கம்
  (தோன்றல், திரிதல், கெடுதல்)

நிலைமொழியின் ஈறும் வருமொழியின் முதலும் சேருவது புணர்ச்சியாகும். அப்புணர்ச்சி இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என இருவகைப்படும்.

**இயல்புப் புணர்ச்சி**

மழை + நீர் = மழைநீர்

இதில் மழை, நீர் என்ற இரு சொற்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு சொல்லாகின்றது. மழை எனும் சொல் நிலைமொழி. அதன் ஈற்றெழுத்து **(ழ் + ஐ = ழை)** . அதனை அடுத்து வரும் **(ந் + ஈ = நீ)** நீர் எனும் சொல் வருமொழி. இந்த இரண்டு சொற்களும் இயல்பாகப் புணர்வதனால் இயல்புப் புணர்ச்சி எனப்படுகின்றது.

**விகாரப் புணர்ச்சி**

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது மாற்றம் ஏற்படுமாக இருந்தால் அது விகாரப் புணர்ச்சியாகின்றது. **வாழை, பழம்** ஆகிய இரு சொற்களும் புணரும்போது **ப்** தோன்றுகின்றது. **(வாழைப்பழம்)** இதனை விகாரப் புணர்ச்சி என்பர். விகாரப் புணர்ச்சி மூன்றுவகைப்படும்.

1. **தோன்றல் விகாரம்**

   தமிழ் + பாடம் = தமிழ்ப் பாடம்

   அந்த + காலம் = அந்தக் காலம்

2. **கெடுதல் விகாரம்**

   மரம் + வேர் = மரவேர்

   மனம் + வேதனை = மனவேதனை

3. **திரிதல் விகாரம்**

   மண் + குடம் = மட்குடம்

   மரம் + கள் = மரங்கள்

   கல் + சிலை = கற்சிலை

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- புணர்ச்சி வகைகளை விளக்கும் அட்டைகள்
- டிமைன்தாள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- நிலைமொழி, வருமொழி பற்றிக் கூறுவார்.
- புணர்ச்சியை வரைவிலக்கணப்படுத்திக் கூறுவார்.
- புணர்ச்சியை வகைப்படுத்தி, ஒவ்வொரு வகைக்கும் உதாரணம் கூறுவார்.